வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


Email : news@eelanadu.lk மலர் : 03 19.04.2022 செவ்வாய்க்கிழமை இதழ் : 134 பக்கங்கள் : 16

# நாளை முதல் ஒரு வாரத்துக்கு நாடு முழுவதும் ஹர்த்தால்!

## 300 தொழில் சங்கங்கள் அழைப்பு

கொழும்பு, ஏப். 19

அரசாங்கத்தை பதவி விலகக் கோரி நாளை புதன்கிழமை தொடக்கம் ஒரு வாரத்துக்கு ஹர்த்தல் அனுஷ்டிக்கப்படும் என்று 300இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இதன்படி, நாளை புதன்கிழமை ஆரம்பமாகும் ஹர்த்தால் எதிர்வரும் 28ஆம் திகதி வரை நீடிக்கும். அத்துடன், அனைத்து நகரங்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள் இணைந்து போராட்டங்களை நடத்துவர் என்று தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் ஒன்றிய தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் - காலிமுகத்திடலில் நேற்று 10ஆவது நாளாகவும் பெருந்திரளானவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாகவே நீண்ட ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)



# 17 புதிய அமைச்சர்கள் நேற்று பதவியேற்றனர்!

கொழும்பு, ஏப். 19

17 அமைச்சர்கள் கொண்ட புதிய அமைச்சரவை நேற்று ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றது. நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஜனாதிபதி மாளிகையில் இவர்கள் பதவி பிரமாணம் செய்துகொண்டனர்.

புதிய அமைச்சரவையின்படி, பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவும், வெளிவிவகார அமைச்சராக ஜீ. எல். பீரிஸும், நிதி அமைச்சராக அலி சப்ரியும் தொடர்கின்றனர். கடற்றொழில் அமைச்சராக மீண்டும் டக்ளஸ் தேவானந்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய அமைச்சர்களாக பொது

15

# புதிய அமைச்சரவையில் மூத்தவர்கள் பலர் இல்லை

## ராஜபக்ஷ குடும்பமும் 'அவுட்'

கொழும்பு, ஏப். 19

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கிவந்த முன்னாள் அமைச்சர்கள் பலருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை.

அண்மையில் 4 பேர் அமைச்சர்களாக பொறுப்பேற்றிருந்த நிலையில், நெடுஞ்சாலைகள் அமைச்சராக பொறுப்பேற்ற ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ தற்போது அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

15

# 21 இராஜாங்க அமைச்சர்கள் நேற்று பதவிப் பிரமாணம்!

கொழும்பு, ஏப். 19

புதிய அமைச்சரவை பதவியேற்றதைத் தொடர்ந்து நேற்று மாலை 21 இராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்றனர்.

இதன்படி, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக ஜீ. எல். பீரிஸ், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சராக ரோஹண திஸநாயக்க, பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சராக அருந்திக பெர்னாண்டோ, நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக

15

# தவறுகளை ஏற்கின்றேன் திருத்தி செயல்பட தயார்!

## மன்னிப்புக் கோரினார் ஜனாதிபதி

### அரசமைப்பை மாற்றவும் சம்மதம்

### இரசாயன உர இறக்குமதிக்கும் அனுமதி



கொழும்பு, ஏப்ரல் 19

**எனது அரசாங்கம் தவறுகளை இழைத்துள்ளது. அந்தத் தவறுகளை திருத்திக்கொண்டு முன்னோக்கி செல்வதற்கு தயாராக இருக்கிறேன். பொருளாதார நெருக்கடியால் மக்கள் மிகவும் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர். இதற்காக வருத்தம் தெரிவிக்கிறேன் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

15

# பேராசிரியர் இராஜேஸ்வரி லண்டனில் காலமானார்!



லண்டன்,ஏப். 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற இரசாயனவியல் பேராசிரியரும் இரசாயனவியல் துறையின் முன்னாள் துறைத் தலைவருமான பேராசிரியர் திருமதி இராஜேஸ்வரி மகேஸ்வரன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

யாழ்ப்பாணம் கர வெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர், விஞ்ஞானமாணி (சிறப்புப்)

15

# பெற்றோலுக்காக காத்திருந்த முதியவர் மயங்கிவீழ்ந்து பலி!

## சாவகச்சேரியில் நேற்று பரிதாபம்

தென்மராட்சி, ஏப். 19

சாவகச்சேரியில் பெற்றோலுக்காக நீண்டநேரம் வரிசையில் காத்திருந்த முதியவர் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

நேற்று மாலை சாவகச்சேரி - நுணாவில் லங்கா ஐ. ஓ. சி. எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நீண்டநேரம் வரிசையில் காத்திருந்த

15

# மக்கள் குரலை தொடர்ந்தும் புறக்கணிப்பது ஆபத்தானது

கொழும்பு, ஏப். 19

மக்களின் குரலைத் தொடர்ந்தும் புறக்கணிப்பது ஆபத்தானது எனத் தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் நிலவும் நெருக்கடிகளுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் முன்வந்து கலந்துரையாடி தீர்வுகாண வேண்டுமென ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நெருக்கடிகள் தொடர்பில் கலந்துரையாடி அவற்றுக்கான இணக்கமான தீர்வொன்றை எட்டவேண்டும் என வலியுறுத்தியுள்ள தேர்தல் ஆணைக்குழு, மக்களின் குரலை தொடர்ந்தும் புறக்கணிப்பது ஆபத்தானது எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது. (அ)

# பொது இடங்களில் முகக்கவசம் அணிவது இனிக் கட்டாயமல்ல!

கொழும்பு, ஏப். 19

பொது இடங்களில் முகக் கவசம் அணிவது கட்டாயமல்ல என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் நேற்று முதல் நடைமுறைக்கு வருவதாக நாட்டின் புதிய சுகாதாரத்துறை அமைச்சர் சன்ன ஜயசுமண நேற்று அறிவித்தார். எனினும் பொதுப் போக்குவரத்து மற்றும் உள்ளக நிகழ்வுகளில் முகக்கவசம் அணிவது கட்டாயமானது என்றும் அவர் கூறினார். (ஐ)



## இப்படியும் நடக்கிறது...!

இந்தியாவிலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசாங்கம் தான் பதவியில் இருக்கின்றது. பாகிஸ்தானிலும் அப்படியே. ஆனால், இரண்டு நாடுகளுக்குமிடையே என்ன வித்தியாசம் என்று கேட்டால், விவரம் தெரிந்த விமர்சகர்கள் இப்படித்தான் பதில் தருவார்கள்:

'இந்தியாவில் ஓர் அரசாங்கம் இருக்கின்றது. அதற்கு ஓர் இராணுவம் இருக்கின்றது. பாகிஸ்தானில் ஓர் இராணுவம் இருக்கிறது. அதற்கு ஓர் அரசாங்கம் இருக்கின்றது'.

அதன் அர்த்தம் என்ன என்பதை இங்கே எழுதித்தான் தெரியவேண்டும் என்பதல்ல.

இந்தியாவைப் போலவே நமது நாட்டிலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்று இருக்கின்றது. அதற்கு ஓர் இராணுவம் இருக்கின்றது.

இந்த நாடு ஒரு ஜனநாயக நாடு. இதற்கென்று ஓர் அரசியலமைப்பு இருக்கின்றது. அந்த அரசியலமைப்பை, ஆட்சி செய்பவர்கள் எப்படி மீறமுடியாதோ அதேபோல மக்களும் மீற முடியாதுதான்.

அரசமைப்புக்கு முரணாக அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவை நியமித்து அரசியலமைப்பை கேலிக்கூத்தாக மாற்றியபோது, அதற்கு எதிராக பொங்கி எழுந்தவர்கள் நாங்கள்.

இதனை அனுமதித்தால், தமிழர் பிரச்னைக்கு அரசியலமைப்பில் ஒரு தீர்வைக் கொண்டுவந்தாலும், அதனை ஜனாதிபதி தன்னிச்சையாக மீறி, அந்தத் தீர்வை இல்லாமல்செய்ய முனையலாம். அதனாலேயே அதற்கு எதிராக நாங்கள் போராடுகின்றோம் என்று அப்போது அதற்கு விளக்கம் தந்தவர் நமது சுமந்திரன்.

இன்று, நாடு எதிர்கொண்டுள்ள பிரச்னைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்று காலிமுகத்திடலில் சில ஆயிரம் பேர் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அவர்களின் கோரிக்கைகள் என்ன என்பதும் வாசகர்கள் அறிந்ததுதான்.

'கோட்டா கோ ஹோம்' - அதாவது, ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்பதே முதலாவது பிரதான கோரிக்கை. மற்றைய கோரிக்கைகளில் முக்கியமானது, ஊழல் மூலம் வெளிநாடுகளுக்கு கொண்டுசெல்லப்பட்ட நமது நாட்டு சொத்துக்கள் மீண்டும் நாட்டுக்கு கொண்டுவரப்படவேண்டும் என்பது.

இதுபோன்ற கோரிக்கைகளை இதற்கு முன்னரும் நாம் கேட்டிருக்கின்றோம். 2015 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் அதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் பல ஆயிரம் கோடி கொள்ளையடித்துவிட்டனர் என்றும், தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அதனை நாட்டுக்குள் கொண்டுவருவோம் என்றும் வாக்குறுதி அளித்தே அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். டுபாய் வங்கியில் 500 மில்லியன் டொலர்கள் ஒரு வங்கிக் கணக்கில் இருக்கின்றது, அதனை கொண்டுவருகின்றோம் என்று, ஆட்சிக்கு வந்த பின்னரும் சொன்னார்கள், கொண்டுவரவில்லை.

ஆனால், நடந்தது என்ன? மஹிந்தர் தனது பத்து வருட ஆட்சியில் சேர்த்ததாக சொல்லப்பட்ட தொகையைவிட, பெருந்தொகை அந்த ஆட்சியில் மத்திய வங்கியிலேயே 'கொள்ளை'யடிக்கப்பட்டது.

இன்றுவரை அந்த பணம் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டதாக தகவல் இல்லை.

இப்போது மீண்டும் அதே கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. அந்தக் கோரிக்கையும் - போராட்டம் வெற்றியளித்து, அதனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும், அதே அரசியல்வாதிகளே மீண்டும் ஆட்சியில் இருப்பார்கள்.

இந்த அரசாங்கம் வீட்டுக்கு போகவேண்டியதுதான் என்பதில் யாரும் மாற்றுக் கருத்து கொண்டிருப்பதாக தெரியவில்லை. ஆனால், அதற்காக நாங்கள் செய்கின்ற போராட்டம் சரியான பாதையில் தான் செல்கின்றதா என்ற கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லை.

அவர்கள் (நல்லாட்சி) சரியில்லை, இவர்கள்தான் வேண்டும் என்று, 65 லட்சம் மக்கள் வாக்களித்தே இவர்களைக் கொண்டுவந்தார்கள். ஆனாலும், 55 லட்சம் பேர் அவர்கள் வேண்டாம் என்றும் வாக்களித்தார்கள்.

இப்போது, இவர்கள் வேண்டாம் என்று சில ஆயிரம் பேர் தொடர் போராட்டங்களை நடாத்துவதனால் அவர்கள் ஆட்சியைவிட்டு சென்றுவிடவேண்டும் என்று கூறுவது சரியானதுதானா? அல்லது, அப்படி சில ஆயிரம் பேர் கேட்பதால் இவர்கள் ஆட்சியை விட்டு செல்ல வேண்டுமா?

நாம் எந்த போராட்டங்களை நடத்தினாலும் அதற்கு அரசியலமைப்பு ரீதியாகவே தீர்வு காணப்படவேண்டும். இதனால்தான், மேலே பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்குமுரிய வித்தியாசத்தை பார்த்தோம்.

நீங்கள், உங்களுக்கு மீட்பர்களாக இருப்பார்கள் என்று நம்பியவர்கள் அப்படி இல்லை என்றால், அதற்காக அவரை பதவிவிலக கேட்பது நியாயமானதுதான். ஆனால், அவர் பதவி விலக மறுத்தால், அடுத்தது என்ன செய்யலாம்? அவரை பதவியிலிருந்து வெளியேற்ற, அடுத்த தேர்தல்வரை பொறுத்திருக்க முடியாவிட்டால், நமது அரசியலமைப்பு என்ன சொல்கின்றது? இவர்மீது குற்ற பிரேரணையைக் கொண்டுவந்து அவரை வெளியேற்றலாம். அவ்வாறு கொண்டுவரவேண்டும் என்றால் அதற்கு என்ன செய்யவேண்டும்?

பாராளுமன்றத்தினுடாகவே அதனை செய்யலாம் என்றால், போராட்டக்காரர்கள் என்ன செய்யலாம்? இந்த பாராளுமன்றத்தில் இருக்கும் 225 எம்.பி.க்களின் வீடுகளையும் அல்லவா முற்றுகையிட்டு போராட்டம் நடத்தவேண்டும்.

65 லட்டம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒருவரை சில ஆயிரம் பேர் போராட்டம் நடத்தி பதவி இறக்க முடியும் என்றால், எதிர்காலத்தில் எவர் ஒருவரும் தொடர்ச்சியாக ஆட்சில் இருந்து, நிலையான ஆட்சியைத் தரமுடியாது போகலாம். எடுத்ததற்கெல்லாம் போராட்டமே பதிலாக மாறும் நிலையே தோன்றும்.

நாட்டை தற்போதுள்ள நெருக்கடியிலிருந்து மீட்க-இடைக் கால அரசுக்கு தலைமைதாங்க தான் தயராக இருப்பதாக கூறும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்த நிலைமையை சீர்செய்ய 18 மாதங்கள் தேவை என்கிறார்.

போராட்டங்கள் இப்படியே தொடர்ந்தால், அந்த 18 மாதங்கள் 28 ஆகுமே தவிர, குறையப்போவதில்லை!

**- ஊர்க்குருவி**

# கப்ராலுக்கு விதிக்கப்பட்ட பயண தடை மேலும் நீடிப்பு

கொழும்பு, ஏப். 19

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயணத்தடையை எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

எதிர்வரும் 2 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் அறிவித்து அஜித் நிவாட் கப்ராலுக்கு நேற்று மீண்டும் அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 07ஆம் திகதி நீதிவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைய, அவர் மன்றில் ஆஜராகாததால் மீண்டும் அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெக்குனுவெல முன்னிலையில் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிரான முறைப்பாடு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவருக்கு இவ்வாறு மீண்டும் அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டது.

மத்திய வங்கியின் ஆளுநராக செயல்பட்ட காலப்பகுதியில், திறைசேரி பற்றுச்சீட்டுக்களை தமக்கு நெருக்கமானவர்களுக்கு விற்பனை செய்தமையூடாக அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக குற்றஞ்சாட்டி முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

6 குற்றச்சாட்டுக்களின் கீழ், முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னக்கோன் தாக்கல் செய்துள்ள தனிப்பட்ட முறைப்பாட்டை ஆராய்ந்த கொழும்பு மேலதிக நீதவான், நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகுமாறு கடந்த 7ஆம் திகதி அறிவித்தல் பிறப்பித்தார். விடயங்களை ஆராய்ந்த மேலதிக நீதிவான், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநருக்கு எதிராக வெளிநாட்டு பயணத்தடையையும் விதித்து உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காலிமுகத்திடல் போராட்டம் 10ஆவது நாளாக தொடர்ந்தது

கொழும்பு, ஏப். 19

கொழும்பு காலிமுகத்திடலில் இளைஞர்களின் எழுச்சிப் போராட்டம் நேற்று 10ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பு காலிமுகத்திடலில் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சித்திரை புத்தாண்டுடன் கூடிய ஒருவார விடுமுறை நேற்றுடன் நிறைவுக்கு வந்த நிலையில் அரச, தனியார் ஊழியர்கள் தங்களது பணிகளுக்கு திரும்பியுள்ள போதிலும்கூட அதனையும் பொருட்படுத்தாது இளைஞர், யுவதிகள் இந்த ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறும் பதாதைகளை ஏந்தியவாறும் இளைஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த ஆர்ப்பாட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் நாட்டின் பல பாகங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அலுவலக தினமான நேற்றுக் காலை கொழும்பு காலிமுகத்திடலில் வாகன நெரிசல் அதிகரித்து காணப்பட்டது. கொழும்பு காலிமுகத்திடலூடாக பயணிக்கும் வாகனங்கள், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவர்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் ஒலி எழுப்பி சென்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரிட்டனிலிருந்து போராட வந்த இலங்கையர்

கொழும்பு, ஏப். 19

சமீபத்தில் 2022 ஒலிவியர் விருதுகளில் சிறந்த நடிகருக்கான விருதை வென்ற இங்கிலாந்தைச் சேர்ந்த இலங்கை நடிகர் ஹிரன் அபேசேகர நேற்று இலங்கையை வந்தடைந்தார்.

இதன்போது, கொழும்பில் காலி முகத்திடல் நடைபெற்று வரும் அமைதியான பொதுப் போராட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதாக நடிகர் ஹிரன் அபேசேகர தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டுக்கான ஒலிவர் விருது வழங்கலில் சிறந்த நடிகருக்கான விருதை 'லைப் ஒவ் பை' (Life of Pi) நாடக தழுவலுக்காக ஹிரன் அபேசேகர பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மொறட்டுவையில் மக்கள் பேரணி

கொழும்பு, ஏப். 19

"மக்களை வதைக்கின்ற அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம்" என்ற தொனிப்பொருளில் மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்ட பேரணி நேற்று காலை வாதுவை நகரிலிருந்து ஆரம்பமாகி நேற்று மாலை மொறட்டுவையை அடைந்தது.

மொறட்டுவையிலிருந்து இன்று காலை 9.00 மணிக்கு மீண்டும் ஆரம்பமாகும் பேரணி இன்று மாலை கொழும்பை வந்தடையவுள் ளது.

மக்களின் பணம் சூறையாடப்பட்டுள்ளது, சமைப்பதற்கு எரிவாயு இல்லை, வீட்டில் மின்சாரம் இல்லை போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் பேரணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பெருமளவு மக்கள் கலந்துகொண்டுள்ளனர்.

அரசாங்கத்துக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் அவர்கள் பேரணியை தொடர்ந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் பங்கேற்றனர். மக்கள் விடுதலை முன்னணியின் இந்த மூன்று நாள் போராட்டமானது நேற்று காலை 9 மணியளவில் பேருவளையிலிருந்து ஆரம்பமாகியிருந்தது.

# நாட்டில் உணவு நெருக்கடியை தீர்க்க பலம்மிக்க நாடுகளுடன் ரணில் பேச்சு

கொழும்பு, ஏப். 19

இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள உணவு நெருக்கடியை தீர்ப்பதற்கு நிவாரணத்தை பெற்றுக்கொள்வதற்காக முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, பலமிக்க 5 நாடுகளிடம் பேச்சு நடத்தியுள்ளார்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இங்கிலாந்து, சீனா, இந்தியா ஆகிய நாடுகளுடனேயே ரணில் விக்ரமசிங்க பேச்சு நடத்தியுள்ளார். எதிர்காலத்தில் இதனை விட கடுமையான உணவு நெருக்கடியை இலங்கை எதிர்நோக்க நேரிடும் என அந்த நாடுகளிடம் முன்னாள் பிரதமர் விளக்கியுள்ளார்.

இந்த பிரச்னையில் இலங்கைக்கு எப்படி உதவுவது என்பது குறித்து ஆராய்ந்து வருவதாக அந்த நாடுகள், முன்னாள் பிரதமரிடம் கூறியுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தால், இலங்கைக்கு உதவுவது இலகுவாக இருக்கும் என இந்த 5 நாடுகளின் பிரதிநிதிகள் முன்னாள் பிரதமருக்கு அறிவித்துள்ளன. (அ)

வார இதழ் ஈழநாடு
Eelanadu
19.04.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், சித்திரை 06

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தேசிய போராட்டம் என்றால் என்ன?

20ஆம் திகதியை தேசிய போராட்ட தினமாக அறிவித்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. தொழில்சங்கங்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு செல்லுமாறு கோரி, தொடர்ந்தும் காலிமுகத்திடலில் மக்கள் கூடிவருகின்ற நிலையில், இதற்கு ஆதரவு தெரிவித்தே இவ்வாறானதோர் அறிவிப்பு வெளியாகியிருக்கின்றது.

இலங்கை சுதந்திரமடைந்ததாக சொல்லப்படும் காலத்திலிருந்து, இந்தத் தீவு, பல போராட்டங்களை கண்டிருக்கின்றது. குறிப்பாக 1948இற்கு பின்னரான காலத்தில், தமிழ் மக்கள் தங்களின் அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து, சாத்வீக அடிப்படையில் போராட்டங்களை நடத்தியிருக்கின்றனர். இந்த போராட்டங்களுக்கு தென்னிலங்கை செவிசாய்க்காத காரணத்தால்தான், தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை நோக்கி ஈர்க்கப்பட்டனர்.

இறுதியில், மூன்று தசாப்தங்களுக்கும் மேலான யுத்தமொன்றிற்குள் நாடு சிக்கியது. சிங்கள மக்களை பொறுத்தவரையில், தமிழர்களின் ஆயுதப் போராட்டமென்பது ஒரு பயங்கரவாத பிரச்னை. இந்த பின்புலத்தில் நோக்கினால், இலங்கை சுதந்திரமடைந்ததாகக் கூறப்படும் காலத்திலிருந்து, இலங்கையில் தேசிய ரீதியான எந்தவொரு போராட்டமும் இடம்பெறவில்லை. அவ்வாறானதோர் அரசியல் பாதையில் இலங்கை பயணிக்கவில்லை.

எனவே, இலங்கையை பொறுத்தவரையில் சிங்கள- தமிழ் - முஸ்லிம் மக்கள் அனைவரும் தன்னெழுச்சியில் ஒன்றுபடக்கூடிய தேசிய ரீதியிலான போராட்டம் என்பது, எப்போதுமே சாத்தியப்பட்டதில்லை. இன்று முன்னெடுக்கப்படும் சிங்கள மக்களின் எதிர்ப்பும், ஒரு சிங்கள அரசியல் குடும்பத்திற்கு எதிரான போராட்டமாகவே முன்னெடுக்கப்படுகின்றது. அந்த நபர்களை அகற்றிய பின்னர், இந்த இலங்கைத் தீவை எவ்வாறான பாதையில் கொண்டுசெல்வது என்பதில் எவரிடமும் எந்தவொரு தெளிவான பார்வையும் இல்லை.

ராஜபக்ஷக்கள் அகற்றப்பட்டாலும், அவர்கள் அலங்கரித்த கதிரைகள் அப்படியேதான் இருக்கப் போகின்றன. உண்மையில் தேசிய ரீதியான போராட்டம் என்பது, இந்த நாட்டை சீரழித்துக் கொண்டிருக்கும் அரசியல் கலாசாரத்திற்கும், அரசியல் அதிகார கட்டமைப்புக்கும் எதிரானதாகவே இருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான், அது ஒரு தேசிய ரீதியிலான போராட்டமாக வடிவம் கொள்ளும். வெறும் "தேசிய ரீதியிலான" - என்னும் சொற்கள் அனைத்து மக்களையும் உள்வாங்கிவிடப் போவதில்லை.

2010இற்குப் பின்னர் இடம்பெற்ற, ஒவ்வொரு ஜனாதிபதி தேர்தலின் போதும், தமிழ் மக்கள் ராஜபக்ஷக்களுக்கு எதிராகவே வாக்களித்து வந்திருக்கின்றனர். இந்த பின்புலத்தில் நோக்கினால், நாடு தழுவி முன்னெடுக்கப்படும் ராஜபக்ஷக்களுக்கு எதிரான குரலிலிருந்து தமிழர்கள் தங்களை விலக்கிக் கொள்ளவும் முடியாது, அதேவேளை தேசிய ரீதியான போராட்டம் என்னும் மாயைக்குள்ளும் விழுந்துவிட முடியாது. ஏனெனில், ராஜபக்ஷக்கள் அகற்றப்பட்ட பின்னர், தமிழர்கள் மீளவும் தங்களின் உரிமை கோரிக்கைகளை புதியவர்களிடம் முன்வைக்க வேண்டிய அரசியல் சூழலே நாட்டில் காணப்படுகின்றது.



# 'கோட்டா கோ கம'வில் கம்பவாரிதி!

அலசுவது இராஜதந்திரி

இ அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் காலிமுகத் திடலில் "கோட்டா கோ கம" என்று பெயரிடப்பட்ட கற்பனைக் கிராமத்திற்கு ஆன்மீக மற்றும் இலக்கியவாதியான கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்களும் நேற்று முன்தினம் சென்றிருந்தார்.

கம்பவாரிதி ஜெயராஜ் சகிதம் இந்து மதகுருமார்கள் சிலரும் கம்பன் கழக உறுப்பினர்கள் சிலரும் காலிமுகத்திடல் "கோட்டா கோ கம"வுக்கு சென்று அங்குள்ளவர்களுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

நேற்று முன்தினம் கம்பவாரிதி இ. ஜெயராஜின் காலிமுகத்திடல் வருகை, அங்கு நின்ற ஏராளமான ஆர்ப்பாட்டக்காரரர்களையும் கவர்ந்திருந்தது. அத்துடன், அரசியலுக்கு அப்பாற்பட்ட விதத்தில் இன, மத பேதங்களை கடந்த நிலையில் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்துக்கு தமிழ் மக்கள் வழங்கிய அங்கீகாரமாகவும் கம்பவாரிதியின் காலிமுகத்திடல் வருகையை கொள்ள முடியும்.

கம்பவாரிதி காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள கற்பனைக் கிராமமான கோட்டா கோ கமவுக்கு வந்திருந்தபோது இந்து அந்தணர்களும் ஆசாரசீலர்களாக அவரோடு வந்திருந்தனர். அத்துடன், அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் பலர் கம்பவாரிதியுடன் வந்திருந்த அந்தணர்களிடம் விபூதியோடு ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டனர்.

கம்பவாரிதியின் இலக்கியப் பேச்சுக்கள் தமிழகத்திலும் இலங்கையிலும் மாத்திரமல்ல. உலகெங்கும் பரந்து வாழுகின்ற புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் பிரபலமானவை.

இருந்தபோதிலும் கம்பவாரிதி காலிமுகத்திடலில் நாட்டின் இன்றைய நிலவரம் குறித்து தமிழில் ஆற்றிய உரை சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்ட போது பலத்த கரகோஷத்தைப் பெற்றிருந்தது.

நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசாங்கம் தனது பொறுப்புகளை சரிவர உணர்ந்து நடக்காத பட்சத்திலும், நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யாத நிலையிலும் பதவி விலகி நாட்டு நலன் கருதி விலகிச்செல்வதே மேலானதாகும் என்றவகையில் கம்பவாரிதி தமது கருத்தை ஆழமாக அதேசமயம் சுருக்கமாக வெளியிட்டிருந்தார்.

அத்துடன், கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிர்த்த ஞாயிறு தினமாகும். இலங்கையில் ஓர் இரத்தக்கறை படிந்த வரலாற்றை கொண்டதாகவே உயிர்த்த ஞாயிறு தினம் விளங்குகின்றது. 2019ஆம் ஆண்டு கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்திலும் நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் ஏககாலத்தில் நிகழ்த்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில் சுமார் 254 பேர் கொல்லப்பட்டனர்.

எனவே, 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலுக்கு நீதி கோரி கத்தோலிக்க குருமார்கள் , கன்னியாஸ்திரிகள் மற்றும் கத்தோலிக்க மக்கள் கொழும்பு கொட்டாஞ்சேனையிலிருந்து ஊர்வலமாக காலிமுகத்திடலுக்கு வந்திருந்தனர். இதன் மூலம் முழு நாடுமே ஓர் அநீதி நிறைந்த சூழலில் இருந்து வருவது புலனாகியிருந்தது.


இதேவேளை கம்பவாரிதி இ. ஜெயராஜ் காலிமுகத்திடலுக்கு வந்திருந்த நிகழ்வை எடுத்துக்கொள்ளும் பட்சத்தில் அவர் குறித்து மனதில் நிழலாடுகின்ற மற்றொரு விடயம் "சூரியக்கதிர்" இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெற்ற சம்பவமாகும்.

1995ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை "சூரியக்கதிர்" இராணுவ நடவடிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து யாழ்ப்பாண குடாநாட்டை மீட்கும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அந்தச் சமயம் யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள கம்பவாரிதி இ. ஜெயராஜின் கம்பன் கோட்டம் கூட இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டிருந்தது. அங்கே கம்பவாரிதி இ. ஜெயராஜ் அழகுற அமைத்திருந்த சிற்ப வேலைப்பாடுகளோடு கூடிய கதவுகள் மண்டபங்கள் மற்றும் அவரது சேகரிப்புகளான சிற்பங்கள், சிலைகள் என்பவற்றை இராணுவத்தினர் மிக அவதானமாக நோட்டமிட்டனர். அதன்பின்னர் யாழ்ப்பாணத்தில் இத்தகைய ஓர் இல்லத்தை அன்று அங்கு பலம் பொருந்தியவராக இருந்து பின்னர் பின்வாங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வே. பிரபாகரன் மட்டுமே கொண்டிருக்க முடியும் என்று எண்ணியவர்களாக பிரபாகரன் வசித்த இல்லத்தை கண்டுபிடித்துவிட்டோம் என்று தெரிவித்து கொழும்புக்கு அறிவித்தனர். அந்தத் தகவலை கொழும்பின் பிரபல ஆங்கில பத்திரிகை யொன்றும் கம்பவாரிதியின் இல்லத்தை காண்பிக்கும் படத்துடன் பிரசுரித்திருந்திருந்தது.

ஆனால், தற்போது தமிழர்களுக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் வாழ்ந்து வருகின்ற கம்பவாரிதி இ. ஜெயராஜ் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை இடம்பெற்று இருபத்தேழு வருடங்களின் பின்னர் அனைத்து இன மக்களும் திரண்டிருந்த காலிமுகத்திடலில் நாட்டு நலன் கருதி உரையாற்றியிருப்பது தமிழர்களின் நாட்டுப்பற்றையும் அநீதிகளுக்கு எதிராக அவர்கள் குரல் கொடுப்பதையுமே எடுத்துக்காட்டியிருக்கிறது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
விடாமுயற்சியால் வெற்றி கிடைக்கும் நாள். தன்னம்பிக்கை கூடும். வேலையில் முன்னேற்றம் காண்பீர்கள். அதிகாரியின் ஆதரவு கூடும். முன்பு உருவான புதிய திட்டங்களை செயல்படுத்துவீர்கள்.

**இடபம்**
சுப நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மகிழ்வீர்கள். தன வரவு திருப்தி தரும். பழைய கடனை அடைப்பீர்கள். தம்பதியரிடையே புரிதல் கூடுதலாகும். விருந்திற்கு செல்வீர்கள்

**மிதுனம்**
உடல் நிலை மேம்படுவதற்கான முயற்சியை மேற்கொள்வீர்கள். இன்று சிறு உடல் உபாதைக்காக மருத்துவ சிகிச்சைக்கு செல்வீர்கள். இளைஞர்கள் போட்டி தேர்வுகளில் நல்ல மதிப்பெண் பெறுவீர்கள்.

**கடகம்**
வாகன வகையில் பராமரிப்பு செலவு ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு குழந்தைகள் உடல் நலனில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். இயற்கை உணவில் நாட்டம் அதிகரிக்கும்.

**சிம்மம்**
வழிபாடுகளில் ஈடுபாடு ஏற்படும் நாள். நிம்மதி கூடும். நிலம் தொடர்பானவற்றில் புதிய முதலீடுகள் செய்யலாம். புதிய பொருட்களின் சேர்க்கை உணடாகும்.

**கன்னி**
எதிர்பார்த்ததை விட பணவரவு நன்றாக இருக்கும். மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கும் நிகழ்வு வீட்டில் நடக்கும். கட்டிய வீட்டைச் சீர்செய்யத் திட்டம் போடுவீர்கள்.

**துலாம்**
குடும்பத்தில் அமைதி நிலவும். கனவு நனவாகும் நாள். நினைத்தது நிறைவேற தெய்வ அனுகூலம் கிடைக்கும். சக பணியாளர்களுடன் ஒற்றுமை அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
பிறருக்குப் பிரதிபலன் பாராமல் உதவி செய்வீர்கள். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். அலைச்சல் ஏற்பட்டாலும் நன்மை ஏற்படும் நாள்.

**தனுசு**
நண்பரின் மருத்துவ செலவிற்கு உதவி செய்வீர்கள். வீட்டில் சுபச்செலவால் மகிழ்ச்சி ஏற்படும் நாள். வியாபாரம் சிறக்க புது யோசனைகளை மேற்கொள்வீர்கள்.

**மகரம்**
உறவினர்கள் மூலம் வந்த செலவு நற்பலன் தரும். குடும்பத்தில் இன்று அமைதி காப்பது நல்லது. ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். நிம்மதி ஏற்படும்.

**கும்பம்**
முன்னேறுவதற்கான புதிய வாய்ப்புகள் கிடைக்கும். புதிய முதலீடுகள் செய்வீர்கள். முந்தைய பிரச்னை சரியாகும். குடும்ப விஷயத்தில் பிறர் தலையிடுவதை அனுமதிக்காதீர்கள்.

**மீனம்**
மாணவர்களின் கல்வி திறன் மேம்படும். தந்தைக்கு நன்மை வரும். பங்குதாரருடன் நல்லுறவு ஏற்படும். நிதான லாபம் வரும். இன்று மற்றவர்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டாம்.

# ஈழத் தமிழர் வாழ்வுரிமையை நிலைநாட்டுமாறு ஆர்ப்பாட்டம்

## ம. தி. மு. க. பொதுச் செயலர் அறிவிப்பு

சென்னை, ஏப்.19

ஈழத்தமிழர்களின் வாழ்வுரிமையை நிலைநாட்ட வலியுறுத்தியும் தமிழக மீனவர்களின் உரிமையைக் காக்கத்தவறிய மத்திய அரசாங்கத்தை கண்டித்தும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட உள்ளதாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் (ம. தி. மு. க.) பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கை அரசாங்கத்தின் அத்துமீறலைக் கண்டும்காணாமல் மத்திய பா. ஜ. க. அரசு வேடிக்கை பார்க்கிறது. இந்நிலையில், இந்திய அரசு ஈழத்தமிழர்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்ட வேண்டும். இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.



அவர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளைத் திரும்பப் பெற்று, கைப்பற்றிய படகுகள் மற்றும் மீன்பிடி கருவிகளை ஒப்படைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, ம. தி. மு. க. சார்பில் எதிர்வரும் 22 ஆம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தெரிவித்துள்ளார்.

# ஆளுநரின் விருந்து புறக்கணிப்பு சட்டசபையில் முதல்வர் விளக்கம்!

சென்னை, ஏப். 19

தமிழ் புத்தாண்டையொட்டி ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற தேநீர் விருந்தை தமிழக அரசு புறக்கணித்தது. முதலமைச்சர், அமைச்சர்கள், அரச அதிகாரிகள் பங்கேற்கவில்லை. தமிழகத்தை ஆளும் தி. மு. க. கூட்டணி கட்சிப்பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவில்லை.

ஆளுநரின் தேநீர் விருந்தை தமிழக அரசு புறக்கணித்தது அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. இந்நிலையில், ஆளுநரின் தேநீர் விருந்தில் ஏன் கலந்து கொள்ளவில்லை என்று சட்டசபையில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் விளக்கம் அளித்தார்.

இதன்போது, ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வை வெளிப்படுத்தும் நீட் விலக்கு மசோதா நீண்ட



நாட்களாக ஆளுநர் மாளிகையில் கவனிப்பாரின்றி முடங்கிக்கிடக்கின்றது. நீட் விலக்கு மசோதா முடங்கி கிடக்கும்போது, தேநீர் விருந்தில் எப்படி பங்கேற்க முடியும்? நீட் விலக்கு மசோதாவை முடக்குவது தமிழக மக்களை அவமதிப்பதாகும்.

நூற்றாண்டு கண்ட சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட நீட் விலக்கு மசோதா ஆளுநர் மாளிகையில் முடங்கிக் கிடக்கிறது. தமிழ்நாட்டு மக்களுக்கு நலன் கிடைக்கிறது என்றால் நான் வலியையும் அவமானத்தையும் தாங்கிக் கொள்வேன்.

ஆளுநர்மீது எனக்கு தனிப்பட்ட விரோதம் இல்லை. தனிப்பட்ட முறையில் ஆளுநருக்கும், எனக்கும் சுமுக உறவு இருக்கிறது. நான் ஆட்சி நடத்தும் விதத்தை பொதுமேடையிலேயே அவர் பாராட்டி பேசியிருக்கிறார். ஆளுநருக்கு உண்டான மரியாதையை தொடர்ந்து வழங்குவோம்.

நீட் விலக்கு மசோதா கிடப்பில் கிடப்பது குறித்து விவாதிக்க தேவைப்பட்டால் சட்டமன்ற அனைத்துக்கட்சி கூட்டம் நடத்தப்படும். நீட் விலக்கு மசோதாவை ஜனாதிபதிக்கு அனுப்ப ஆளுநர் முடிவு எடுத்திருப்பதாகவும் இவ்வாறு அவர் கூறினார்.

# வரி உயர்த்தப்பட்டால் மக்கள் பாதிக்கப்படுவர்!

## எச்சரிக்கிறார் ராமதாஸ்

சென்னை, ஏப். 19

ஜி. எஸ். டி வரி உயர்த்தப்பட்டால் கைத்தறி மற்றும் பட்டுத்துணி தொழில் பாதிக்கப்படும். இதேபோல், மேலும் பல தொழில்களும் ஜி.எஸ்.டி வரி உயர்வால் வீழ்ச்சியடையும் என ராமதாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் பாட்டாளி மக்கள் கட்சி (பா. ம. க.) நிறுவுநர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியவை வருமாறு,

ஜி. எஸ். டி. வரி உயர்வால் தொழில்களும் பாதிக்கப்படும். கைத்தறி துணிகள் மற்றும் பட்டுப்புடவைகள் மீதான ஜி. எஸ். டி. வரியை 5 சதவீதத்தில் இருந்து 12 சதவீதம் ஆக உயர்த்த அண்மையில் முயற்சி நடந்தது. அவ்வாறு உயர்த்தப்பட்டால் கைத்தறி தொழில் சீரழிந்து விடும் என்று எச்சரித்து நடத்தப்பட்ட போராட்டத்தால் அந்த முடிவு கைவிடப்பட்டது.

இப்போது ஜி.எஸ்.டி வரி உயர்த்தப்பட்டால் கைத்தறி மற்றும் பட்டுத் துணி தொழில் பாதிக்கப்படும். இதனைக் கருத்தில்



கொண்டு ஜி. எஸ். டி வரியை உயர்த்தும் முடிவை மத்திய அரசு கைவிட வேண்டும்.

மாநில அரசுகளின் வருவாய் இழப்பை மத்திய அரசே இன்னும் இரு ஆண்டுகளுக்கு ஈடுசெய்ய வேண்டும். இந்த நிலைப்பாட்டை மத்திய அரசிடம் தமிழக அரசு தீவிரமாக வலியுறுத்த வேண்டும் - என்றுள்ளது.

# பாராளுமன்றை கலைக்க ஆளுங்கட்சி கடும் எதிர்ப்பு!

## தேர்தலுக்கு சென்றால் அது ஆளுந்தரப்புக்கு வரலாறு காணாத பின்னடைவு ஏற்படுமாம்

கொழும்பு, ஏப். 19

**பாளுமன்றத்தை கலைக்கும் யோசனையை நிறைவேற்றி, பொதுத்தேர்தலுக்கு செல்லாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் முன்வைக்கப்பட்ட யோசனையை ஆளுங்கட்சி பிரமுகர்கள் நிராகரித்துள்ளனர் என தெரியவருகின்றது.**

அரசு வசம் சாதாரண பெரும்பான்மை (113) இருப்பதாலும், தற்போதைய சூழ்நிலையில் தேர்தலுக்கு சென்றால் அது ஆளுந்தரப்புக்கு வரலாறு காணாத பின்னடைவை ஏற்படுத்தும் என்பதாலுமே தேர்தலுக்கு செல்லும் யோசனை நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கும், பதவி துறந்த அமைச்சர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பொனறு நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இதன்போது சமகால அரசியல் நிலவரம் பற்றியும், அரசியல் நெருக்கடிக்கான தீர்வுகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளன. இதன்போது ஜனாதிபதியால் மூன்று யோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

அரசமைப்பின் பிரகாரம் தனக்கு இரண்டரை வருடம் செல்லும்வரை பாராளுமன்றத்தை கலைக்க முடியாதென்பதால், ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் ஊடாக யோசனையொன்றை முன்வைத்து பாராளுமன்றத்தைக் கலைத்து, தேர்தலுக்கு செல்லாம் என ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட முதல் யோசனையை அவர்கள் ஏற்க மறுத்துள்ளனர்.

அதேபோல பிரதமர் பதவி விலகி, ஆட்சியை முன்னெடுக்க எதிரணிக்கு வாய்ப்பை வழங்கலாம் என முன்வைக்கப்பட்ட யோசனைக்கும் முன்னாள் அமைச்சர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். அரசு வசம் சாதாரண பெரும்பான்மை இருப்பதால் அதற்கான தேவைப்பாடு எழவில்லை, நம்பிக்கையில்லாப் பிரேரைண வந்தால்கூட அதனை தோற்கடிக்கலாம் என ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இறுதியாக , 15 பேருடன் அமைச்சரவையை அமைக்கலாம், சிரேஷ்ட உறுப்பினர்கள் விட்டுக்கொடுப்புகளை செய்யவேண்டும் என்ற யோசனையை ஜனாதிபதி முன்வைத்துள்ளார். அதற்கு சரத் வீரசேகரவைதவிர ஏனையோர் ஆதரவை தெரிவித்துள்ளனர்.

அந்தவகையிலேயே புதிய அமைச்சரவையை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது என தெரியவருகின்றது. (அ)



## பதுளைக்கு எரிபொருளை ஏற்றி சென்ற பவுசர் விபத்து!

கொழும்பு, ஏப். 19

எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு உரித்தான கொள்கலன் வாகனமொன்று, நேற்று அதிகாலை பதுளை - பண்டாரவளை பிரதான வீதியில் உடகும்பல்வெல பகுதியில் வைத்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

கொழும்பிலிருந்து பதுளைக்கு எரிபொருளை ஏற்றி வரும் வழியிலேயே கொள்கலன் பவுசர் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. (அ)

## டொலரின் பெறுமதி மேலும் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 19

பல அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கிகளில் அமெரிக்க டொலரின் விற்பனை விலை நேற்று மேலும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை பெறுமதி 340 ரூபாவாகவும் கொள்வனவு பெறுமதி 330 ரூபாவாகவும் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## புதிய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காங்கேசனில் கடமைகளை ஆரம்பித்தார்



யாழ்ப்பாணம், ஏப். 19

வடக்கு மாகாணத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த விஜயசூர்ய கடமைகளைப் பொறுப்பேற்றார்.

காங்கேசன்துறையில் அமைந்துள்ள வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் நேற்றுக் காலை 8 மணிக்கு அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த விஜயசூர்யவுக்கு சிறப்பு பொலிஸ் அணி வகுப்பு மரியாதை செலுத்தப்பட்டது. (அ-03)

## ரயில் தடம் புரண்டமையால் மலையக சேவைகள் பாதிப்பு



கொழும்பு, ஏப். 19

பதுளை ரயில் நிலையத்துக்கு அருகில் பொடி மெனிக்கே ரயில் தடம் புரண்டதால், மலையகப் பாதையில் ரயில் சேவைகள் தடைப்பட்டன.

நேற்றுக் காலை 8.40 மணியளவில் இந்த ரயில் தடம் புரண்டதாக ரயில் திணைக்களத்தின் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

இந்தநிலையில், குறித்த ரயிலை தடமேற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (அ)

## பங்குப் பரிவர்த்தனை இந்த வாரம் நிறுத்தம்

கொழும்பு, ஏப். 19

கொழும்பு பங்குச் சந்தையின் பங்குப் பரிவர்த்தனை நடவடிக்கைகள் இந்த வாரம் இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் நிலைமையை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (அ)



# பிரதமர் மஹிந்த உடன் பதவி துறக்கவேண்டும்!

### அத்துரலிய ரத்ன தேரர் கோரிக்கை



கொழும்பு, ஏப். 19

மகாசங்கத்தினரது ஆலோசனைகளுக்கு மதிப்பளித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகவேண்டும். காலி முகத்திடலில் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர்களின் கோரிக்கைக்கு அரசாங்கம் மதிப்பளிக்காவிடின் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவ கொள்கையினால் நாட்டு மக்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்க்கொண்டுள்ளார்கள்.

சுபீட்சமான எதிர்கால கொள்கைக்கு முரணாக செயற்பட்டதன் விளைவை அரசாங்கம் தற்போது எதிர்க் கொள்கிறது. அரசியல் மற்றும் சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்னைக்கு பாராளுமன்ற மட்டத்தில் தீர்வு காண முடியாமல் இருப்பதற்கு அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் பிரதான தடையாக உள்ளது.

இடைக்கால அரசாங்கத்தின் ஊடாக 20 ஆவது திருத்தத்தை நீக்கி 21ஆவது திருத்தத்தை கொண்டு வருவதற்காகவே இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

புதிய பிரதமர் தலைமையில் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்பதையும், பிரதமர் மஹிந்த பதவி விலக வேண்டும் என்பதையும் மகாசங்கத்தினர் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளார்கள். மகாசங்கத்தினரது ஆலோசனைக்கு மதிப்பளித்து பிரதமர் பதவி விலக வேண்டும்.

காலி முகத்திடலில் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் இளம் தலைமுறையினரது கோரிக்கைக்கு அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும்.

மக்கள் கருத்துக்கு மதிப்பளிக்காமல் செயற்பட்டால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். மக்களின் ஜனநாயகப் போராட்டம் இறுதியில் இராணுவ போராட்டமாக மாற்றமடையுமா என்ற அச்சம் காணப்படுகிறது- என்றார். (அ)

# அமைச்சு மாற்றத்தை மக்கள் கோரவில்லை

## அரசின் முடிவை அவர்கள் ஏற்கமாட்டார்கள் என்கிறார் பெரமுன எம்.பி. வீரசுமண வீரசிங்க



**கொழும்பு, ஏப். 19**

**புதிய அமைச்சரவை அமைச்சர்களை நியமிப்பதன் மூலமே தற்போதைய நெருக்கடி நிலைமை மோசமடையும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமண வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

தற்போது நாடு எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வுகள் தேவைப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தினுள் இருந்து மற்றொரு குழு அமைச்சுப் பதவிகளை கைப்பற்றுவது மக்களை மேலும் கிளர்ச்சியடையச் செய்யும்.

அமைச்சுக்களை மாற்றுவதும் அமைச்சர்களை மாற்றுவதும் தற்போது மக்கள் கோரும் ஒன்றல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்காலிக நடவடிக்கைகளை பொதுமக்கள் ஏற்க மாட்டார்கள் என்றும், எனவே பொதுமக்கள் தெரிவிக்கும் பிரச்னைகளை அரசு கேட்டு உரிய முடிவுகளை எடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (அ)

# தொழிலாளர் காங்கிரஸ் நடுநிலை வகிப்பது ஏன்?

## ஜீவன் தொண்டமான் விளக்கம்

கொழும்பு, ஏப். 19

“நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எதிர்க்கட்சி எமக்கு தெளிவுபடுத்தவில்லை, சிலவேளை, அது பாராளுமன்றத்தில் தோல்வி அடைந்தால் அடுத்தக்கட்டம் என்னவென்பது குறித்தும் விவரிக்கப்படவில்லை. எனவேதான், நடுநிலை வகிக்கும் முடிவு எடுக்கப்பட்டது. எனினும், எதிர்த்தரப்பினர் தமது திட்டங்களை அறிவித்தால் எமது முடிவையும் அறிவிப்போம்.”

-இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கொண்டுவரப்படுகின்ற நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து எமக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது.

ஆனாலும், அவர்கள் கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எவ்வித தெளிவுபடுத்தல்களும் எமக்கு வழங்கப்படவில்லை. அடுத்தகட்ட நகர்வு குறித்தும் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

பாராளுமன்றத்தில் 113 என்ற பெரும்பான்மையை நிரூபிக்கும் பட்சத்திலேயே அடுத்தகட்ட நகர்வுக்குச் செல்லமுடியும். இருப்பினும் அடுத்த கட்ட நகர்வு தொடர்பில் எதிர்க்கட்சியினரால் எதுவும் தெளிவுபடுத்தப்படவில்லை.

எதிர்த்தரப்பினரின் திட்டங்கள் அறிவிக்கப்பட்ட தன் பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முடிவெடுக்கும்-என்றார். (அ)

## சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்த 41 உறுப்பினர்களும் தனித்து அமர முடிவு

கொழும்பு, ஏப். 19

பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்துள்ள 41 உறுப்பினர்களும் சபையில் தனித்தனியாக அமரவுள்ளனர்.

இந்த தீர்மானம் எழுத்து மூலம் சபாநாயகருக்கு அறிவிக்கப்படும் என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

குறித்த உறுப்பினர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு இடையே நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டது.

சுதந்திரக் கட்சியின் 13 உறுப்பினர்கள், அரசாங்கத்துக்கு ஆதரவை வழங்கிய 10 அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களுமே இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

அத்தோடு சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்த பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்களும் தனியாக அமரவுள்ளனர். (அ)

# கப்ரால் வெளிநாடு செல்ல விதிக்கப்பட்ட தடை நீடிப்பு

கொழும்பு, ஏப். 19

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட பயணத் தடை மே 2 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அஜித் நிவாட் கப்ராலுக்கு நாட்டை விட்டு வெளியேறுவதற்கு நேற்று வரை தடை விதிக்கப்பட்ட நிலையில் அதனை நீடித்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் அறிவித்தது.

மேலும் மே 2ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் கொழும்பு நீதவான் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநராக 2006 ஜூலை 01 ஆம் திகதி முதல் 2015 ஜனவரி மாதம் 08 ஆம் திகதி வரையான காலப் பகுதியில், அமைச்சரவையின் அல்லது நிதிச் சபையின் அனுமதியின்றி இமாத் ஷா சுபைரிக்கு 6.5 மில்லியன் டொலர்களை செலுத்தியதன் மூலம், கப்ரால் குற்றத்தை புரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவர் ஆளுநராக இருந்தபோது, 2022 ஜனவரி 18ஆம் திகதி செலுத்த வேண்டிய முறிப் பத்திரங்கள் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் நஷ்டத்தை ஏற்படுத்தியதாக மற்றுமொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆளுநராக இருந்த காலத்தில், மத்திய வங்கிக்குள் பதவிகளுக்கு தனது நெருங்கிய உறவினர்களை நியமித்ததன் மூலம்-இரகசியத் தகவல்களை வெளியிட்டதன் மூலம் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் மூலம் இலங்கை அரசாங்கம் 10.04 பில்லியன் ரூபாய் நஷ்டமடைந்துள்ளதாக முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் நிலையில், அஜித் நிவாட் கப்ரால் நாட்டை விட்டு தப்பிச் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதால், அவரை நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி மனுதாக்கல் செய்யப்பட்டது.

இதனை பரிசீலித்த நீதவான், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு வெளிநாடு செல்ல தடை விதிக்கும் உத்தரவை பிறப்பித்தார். (அ)

# மக்களின் உணர்வுக்கு ஜனாதிபதி மதிப்பளிப்பதாக தெரியவில்லை

## செந்தில் தொண்டமான் குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 19

மக்களின் உணர்வுகளுக்கு ஜனாதிபதி மதிப்பளிப்பதாக தெரியவில்லை என்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள அத்தனைப் பிரச்னைகளுக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டியவராக உள்ளாரெனவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

10 நாட்களாக காலி முகத்திடலிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஒரு பொதுவான நோக்கத்திற்காகவே தொடர்ந்தும் அனைவரும் போராடி வருகின்றனர்.

நாட்டில் எரிபொருள் மற்றும் எரிவாயுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவிவருகிறது. அதே போன்று அத்தியாவசியப் பொருட்களுக்கும் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், மின்சாரத் துண்டிப்பு இடம்பெற்று வருகிறது. எங்கு பார்த்தாலும் மக்கள் வரிசையில் நிற்கும் காட்சிகளையே காணமுடி கிறது. எந்த பொருட்களையும் கொள்வனவு செய்ய முடியாத அளவுக்கு விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நாட்டு மக்களுக்கு சுமைக்கு மேல் சுமை அதிகரித்துள்ளது. வரலாறு காணாத ஒரு பொருளாதார நெருக்கடியை அரசின் செயற்பாட்டால் மக்கள் எதிர்கொண்டுள்ளனர். இவை அனைத்துக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டியவராக உள்ளார்.

மக்களின் பிரச்னைகள் ஒருபுறம் இருக்கின்ற சூழலில் அமைச்சரவை மாற்றுகிறோம், அரச அதிகாரிகளை மாற்றுகிறோம் எனக் கூறி அரசாங்கம் மக்களின் போராட்டத்துக்கு தீர்வுக் காணாமையானது, அரசாங்கத்தின் முதிர்ச்சியற்ற தன்மையையே வெளிக்காட்டுகிறது.

மக்களின் கோரிக்கை ஒன்றாகவும் அதற்கு அரசாங்கம் வழங்கும் பதில் வேறொன்றாகவும் உள்ளது. இது தலைவலிக்கு மருந்து வாங்க சென்றால் மூட்டு வலிக்கு மருந்து கொடுப்பது போன்ற ஒரு செயற்பாடாகும்.

ஜனாதிபதி செயலகத்துக்கே ஜனாதிபதியால் செல்ல முடியாத சூழல் இருக்கும் தருணத்தில் மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வாறு ஜனாதிபதி தீர்வுகளை பெற்றுக்கொடுக்க போகின்றார் என்பது கேள்விக்குறியானதொரு விடயமாக மாறியுள்ளது-என்றுள்ளது. (அ)

## நெடுஞ்சாலையில் 11 வாகனங்கள் மோதுண்டு விபத்து

கொழும்பு, ஏப். 19

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் காயமடைந்த நிலையில், நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது 11 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டுள்ளதாக கூறப்பட்டது.

கௌனிகம - தொடங்கொடை ஆகிய பகுதிகளுக்கு இடையில் இந்த வாகன விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## அரசுக்கு எதிரான போராட்டங்களுக்கு பல்கலை விரிவுரையாளர்கள் ஆதரவு

கொழும்பு, ஏப். 19

கொழும்பு - காலிமுகத்திடலில் அரசுக்கு எதிராக நடத்தப்படும் பொதுமக்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் அடையாளப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளது.

பொதுமக்களின் வாழ்வுரிமைக்காகக் காலிமுகத்திடலில் நடத்தப்படும் போராட்டத்துக்கான தமது தார்மீக ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கொழும்புப் பல்கலைக்கழக முன்றலில் இருந்து காலிமுகத்திடலை நோக்கி இந்த அடையாளப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளம் அறிவித்துள்ளது.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் நேரடியாக இந்த அடையாளப் பேரணியில் கலந்து கொள்வார்கள் எனவும், நாட்டிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் அதே காலப் பகுதியில் அந்தந்தப் பல்கலைக்கழகங்களில் அடையாளப் போராட்டத்தை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (அ)

# அரசாங்கத்துக்கு ஆதரவா? அரவிந்குமார் முடிவில்லை

கொழும்பு, ஏப். 19
பிரதான எதிர்க்கட்சியால் அரசாங்கத்துக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள நம்பிக் கையில்லாப் பிரேரணை மற்றும் குற்றப் பிரேரணை என்பனவற்றுக்கு ஆதரவளிப்பது தொடர்பில் தான் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை என பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்குமார் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி குறித்த பிரேரணைகளை பாராளுமன்றத்தில் முன்வைக்கும்போது, அதற்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்ற தீர்மானம் தன்னால் அறிவிக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். முன்னதாக அரசால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப் பட்ட 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு அரவிந்தகுமார் எம்.பி. ஆதரவு வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இரண்டு நிலக்கரிக் கப்பல்களுக்கு கட்டணம் செலுத்த முடியாத நிலை

## அனல் மின் உற்பத்தி பாதிக்கப்படலாம்

கொழும்பு, ஏப். 19
ஒரு லட்சத்து 20 ஆயிரம் மெற்றிக் தொன் நிலக்கரியை ஏற்றிய இரண்டு கப்பல்களுக்கான கட்டணத்தை செலுத்த முடியாத காரணத்தினால், அந்த கப்பல்கள் திரும்பி செல்லும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி இலங்கையை இந்த கப்பல்கள் வந்தடைந்தன. இந்த கப்பல்களுக்கு 34 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

அந்த பணத்தைச் செலுத்த முடியாத காரணத்தினால், அந்த கப்பல்கள் கடந்த 7 நாட்களாக இலங்கை எல்லையில் நங்கூரமிடப்பட்டுள்ளன.

இந்த நிலக்கரி தொகை இறக்க முடியாது போனால், நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தில் மின் உற்பத்தி செய்வதில் தடையேற்படும் எனவும் இதனால், தொடர்ந்தும் மின் விநியோகத்தை துண்டிக்க நேரிடும் எனவும் இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கூறினர். (அ)

# பெண்கள் இல்லாத புதிய அமைச்சரவை

கொழும்பு, ஏப். 19
புதிதாக நியமிக்கப்பட்ட 17 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவையில் எந்தவொரு பெண் பிரதிநிதிக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை.

புதிய அமைச்சரவை நேற்று கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டது.

அதற்கமைய, புதிய அமைச்சரவையில எந்தவொரு பெண் பிரதிநிதிகளும் உள்வாங்கப்படவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. மேலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரங்களுக்காக எந்தவொரு அமைச்சரும் இல்லை. முன்னைய அமைச்சரவை யில் பவித்ரா வன்னியாராச்சிக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டிருந்தது.

பெண் பாராளுமன்ற உறுப்பினர்களான பவித்ரா வன்னியாராச்சி, சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, சீதா அரம்பேபொல, கீதா குமாரசிங்க, கோகிலா குணவர்தன, முதித பிரிஷாந்தி, ராஜிகா விக்கிரமசிங்க, மஞ்சுளா திசாநாயக்க, மற்றும் டயனா கமகே ஆகியோர் ஆளுங்கட்சியை பிரதிநித் துவப்படுத்துகின்றனர்.

இவ்வாறு, பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த பல பெண் எம்.பிக்கள் இருந்தும், புதிய அமைச்சரவையின் கீழ் அவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# யாரையும் இனி நம்பமுடியாது ஒன்றிணைந்து போராடுவோம்

## பேராயர் மல்கம் ரஞ்சித் அழைப்பு



**கொழும்பு, ஏப். 19**
**நாட்டில் தற்போது ஊழல் நிறைந்த யுகம் தோற்றம் பெற்றுள்ளது எனவும் இதன் காரணமாக இனிமேலும் எவர் மீதும் நம்பிக்கை கொள்ள முடியாது என்றும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.**

அதிகாரத்தில் உள்ளவர்கள் மாத்திரமின்றி, அதிகாரம் அற்றவர்கள் கூட ஊழல்வாதிகளாக காணப்படுவதால் 74 ஆண்டுகளுக்குள் அழகிய தாய் நாடு சீரழிந்துவிட்டது என்றும் அவர் கவலை வெளியிட்டார்.

இந்நிலையில் ஊழலால் சீரழிந்துள்ள தாய் நாட்டை மீள கட்டியெழுப்புவதற்கு அனைத்து மக்களும் ஒன்றிணைந்து பலத்துடன் செயற்பட வேண்டும் என்றும் பேராயர் அழைப்பு விடுத்துள்ளார்.

பொய்களைக் கூறி ஏமாற்றுதல், நேர்மையற்ற தன்மையின் காரணமாகவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விசாரணைகளுக்கும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என பேராயர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே முழு நாடும் நாட்டு மக்களும் ஏமாற்றப்பட்டுள்ள இந்த சூழலில் நாட்டை மீளக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து பலமடைய வேண்டும் என மல்கம் ரஞ்சித் ஆண்டகை கேட்டுக்கொண்டார். (அ)

# வடக்கில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான இடைவெளியை மாற்றவேண்டும்

## புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 19
வடக்கில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான இடைவெளியை மாற்றியமைக்க வேண்டும் என வடக்கு மாகாணத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த விஜயசூரிய தெரிவித்தார்.

காங்கேசன்துறையில் உள்ள தனது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று காலை கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு பகுதியில் உள்ள மக்களுக்கு தேவையான விடயங்களை பொலிஸார் என்ற ரீதியில் எங்களால் செய்யக்



கூடிய அனைத்து விடயங்களையும் செயற்படுத்த முயற்சி செய்யவுள்ளேன்.

அதற்குரிய சந்தர்ப்பம் எனக்கு கிடைத்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அத்துடன் வடக்கில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் உள்ள இடைவெளி நிலையை மாற்றி அமைக்க வேண்டும். அந்த இடைவெளி நிலையை இல்லாமல் செய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையிலான உறவுப் பாலத்தை மேம்படுத்துவது கட்டாயமாக செய்யப்பட வேண்டிய விடயம்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் என்ற ரீதியில் இந்த விடயங்களை நான் மேற்கொள்வதற்கு தயாராக இருக்கின்றேன்-என்றார். (அ)

# மாற்றத்துக்கான முயற்சிகளை இளைஞர்கள் ஆதரிக்கவேண்டும்

## ஜனாதிபதி கோட்டாபய கோரிக்கை

கொழும்பு, ஏப். 19
புதிய அமைச்சரவையை நியமிக்கும்போது தாம் மூத்த உறுப்பினர்களை கருத்திற் கொள்ளவில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த மாற்றத்திற்கான முயற்சிகளுக்கு இளைஞர்கள் ஆதரவளிக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அமைச்சர் பதவிகள் வெறும் நன்மைகள் அல்ல, அது பெரிய பொறுப்பு என குறிப்பிட்ட அவர் அமைச்சர்கள் எவரும் மேலதிக வரப்பிரசாதங்களை பயன்படுத்தக்கூடாது என கேட்



டுக்கொண்டார்.

நேர்மையான, திறமையான, கறைபடியாத அரசாங்கத்தை இவர்களிடம் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேசமயம் தங்களுக்குச் சொந்தமான நிறுவனங்களை ஊழலில் இருந்து விடுவித்து, பொது மக்களுக்கு சேவை செய்ய உறுதிபூண்டவர்களாக மாற்றியமைக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும் நிதி நெருக்கடியில் உள்ள பெரும்பாலான பொது நிறுவனங்கள் சரி செய்யப்பட வேண்டும் என்றும் அமைப்பில் மாற்றம் வேண்டும் என்ற மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற இது ஒரு சிறந்த வாய்ப்பாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த மாற்றத்திற்கான முயற்சிகளுக்கு இளைஞர்கள் ஆதரவளிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார். (அ)

# கட்டுநாயக்க குத்தகைக்கு?

கொழும்பு, ஏப். 19
பெறுமதியான சில அரச சொத்துக்களை குத்தகைக்கு வழங்கி,8 பில்லியன் அமெரிக்க டொலர்களை உடனடியாக சம்பாதிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம், மத்தளை சர்வதேச விமான நிலையம் மற்றும் இரத்மலானை சர்வதேச விமான நிலையம் என்பனவும் அவற்றில் அடங்கும் என கூறப்படுகின்றது.

இவை நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு விடப்படவுள்ளன. கட்டுநாயக்க விமான நிலையத்தை 2 பில்லியன் டொலர்களுக்கும், மத்தள விமான நிலையத்தை 300 மில்லியன் டொலர்களுக்கும், இரத்மலானை விமான நிலையத்தை 400 மில்லியன் டொலர்களுக்கும் குத்தகைக்கு விட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவற்றை தவிர கொழும்பு துறைமுகத்தின் தெற்கு பகுதியை 600 மில்லியன் டொலர்களுக்கு முதலீட்டுத் திட்டத்தின் அடிப்படையில் வழங்கவும் கொழும்பு துறைமுக நகரில் அரசுக்கு சொந்தமான பகுதிகளை 4 பில்லியன் டொலர்களுக்கு குத்தகைக்கு விடவும் திட்டமிடப்பட்டு வருகிறது.

இதனை தவிர இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தின் அரசுக்கு சொந்தமான பங்குகளை 500 மில்லியன் டொலர்களுக்கும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் இருக்கும் அரசுக்குரிய பங்குகளை 300 மில்லியன் டொலர்களுக்கும் விற்பனை செய்ய உள்ளதாக கூறப்படுகின்றது. (அ)



# பிரசாந்த் கிஷோரிடம் சரணடைகிறதா காங்கிரஸ்?

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் தேர்தல் வியூக வல்லுநர் பிரசாந்த் கிஷோர் கலந்து கொண்டது பேசுபொருளாக மாறியுள்ளது.

இந்தியத் தேர்தல் வரலாற்றில் வாக்காளர்களைக் கவர்வது என்பது தேர்தல் வாக்குறுதிகள் தொடங்கி புதிய அறிவிப் புகள் அறிவிப்பது என பல கட்டங்களை சந்தித்திருக்கிறது. இன்றைய இந்தியச் சூழலில் அதிகரித்துவரும் சமூக வலைத் தளப் பயன்பாடும் வாக்காளர்களைக் கவர்வதற்காக தளமாக பரிணமித்துள்ளது.

இந்நிலையில் பாஜகவின் மோடிக்கு தொடங்கி ஆந் திரத்தில் ஜெகன்மோகன் ரெட்டி, பஞ்சாபில் அமரீந்தர் சிங், மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி, தமிழகத்தில் மு.க. ஸ்டாலின் என பல முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களுக்கு தேர்தல் வியூகங்களை வகுத்துக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டு வெற்றியையும் பெற்றுத் தந்தவர் பிரசாந்த் கிஷோர்.

வாக்காளர்களை குறிப்பிட்ட அரசியல் கட்சிக்காக தயார்படுத்துவது குறித்து மாறுபட்ட கருத்துகள் எழுந்தாலும் இந்திய அரசியலில் இன்றைக்கு தவிர்க்க முடியாத இடத்தை பிரசாந்த் கிஷோர் அடைந்திருப்பது குறிப்பிட்டாக வேண்டிய ஒன்று.

இவற்றுக்கு மத்தியில், 2014 மக்களவைத் தேர்தலில் பாஜகவின் வெற்றிக்குப் பிறகு அக்கட்சியில் முக்கியப் பதவியை எதிர்பார்த்த பிரசாந்த் கிஷோருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அதிலிருந்து அக்கட்சிக்கு எதிராக தன்னுடைய வேலைகளைத் திட்டமிட்டுக் கொண்டார் பிரசாந்த் கிஷோர்.

தேர்தல் வெற்றிக்கு தன்னுடைய வேலைகள் மட்டுமே காரணம் என்கிற வகையில் அவரது செயல்பாடுகளும், பேட்டிகளும் இருந்தன. தங்களுடைய ஒட்டுமொத்த அரசியல் அனுபவத்தையும் அரசியல் கட்சிகள் அவரிடம் அடகு வைத்த நிலையில் தன்னை இந்தியத் தேர்தலின் முக்கிய அங்கமாக மாற்றிக் கொண்டார் பிரசாந்த் கிஷோர்.

இந்நிலையில் கடந்த 10 ஆண்டுகளாக சரிவை சந்தித்துவரும் காங்கிரஸ் கட்சி தற்போது பிரசாந்த் கிஷோரை நம்பியிருப்பது அரசியல் விநோதம். இந்திய சுதந்திரப் போராட்டம் தொடங்கி நவீன இந்தியாவை கட்டமைத்தது வரை காங்கிரஸ் செய்த பங்களிப்புகளையெல்லாம் ஓரம்கட்டிவிட்டு எதிர்வரும் 2024 மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற எதையாவது செய்தாக வேண்டும் என்கிற தர்மசங்கடமான நிலையில் காங்கிரஸ் உள்ளது.

இவற்றுக்கு மத்தியில் காங்கிரஸ் அல்லாத மூன்றாம் அணியை அமைக்க மம்தா பானர்ஜி முயன்று வருவது காங்கிரஸ் கட்சிக்கு மேலும் சவாலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

> **கடந்த 10 ஆண்டுகளாக சரிவை சந்தித்துவரும் காங்கிரஸ் கட்சி தற்போது பிரசாந்த் கிஷோரை நம்பியிருப்பது அரசியல் விநோதம். இந்திய சுதந்திரப் போராட்டம் தொடங்கி நவீன இந்தியாவை கட்டமைத்தது வரை காங்கிரஸ் செய்த பங்களிப்புகளையெல்லாம் ஓரம்கட்டிவிட்டு எதிர் வரும் 2024 மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற எதையாவது செய்தாக வேண்டும் என்கிற தர்மசங்கடமான நிலையில் காங்கிரஸ் உள்ளது. இவற்றுக்கு மத்தியில் காங்கிரஸ் அல்லாத மூன்றாம் அணியை அமைக்க மம்தா பானர்ஜி முயன்று வருவது காங்கிரஸ் கட்சிக்கு மேலும் சவாலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

இந்த ஆண்டின் தொடக்கத்தில் காங்கிரஸ் கட்சியின் பக்கம் தனது கவனத்தைத் திருப்பிய பிரசாந்த் கிஷோர் கடுமையான வார்த்தைகளால் அக்கட்சியை விமர்சித்தார். குறிப்பாக ராகுல் காந்தியை குறித்தும், அவரது தலைமை குறித்தும் கேள்வி எழுப்பினார்.

அவர் தனது ட்விட்டர் பக்கத்தில்,“காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்தும் கொள்கை மற்றும் அதற்குள்ள இடம் ஒரு வலுவான எதிர்க்கட்சிக்கு இன்றியமையாதது. ஆனால் காங்கிரஸின் தலைமை என்பது ஒரு தனிநபரின் கொடுக்கப்பட்ட உரிமை அல்ல. குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளில் கட்சி 90மூ க்கும் அதிகமான தேர்தல்களில் தோல்வியடைந்தபோது. எதிர்க்கட்சிகளுக்கு யார் தலைமை விகிக்க வேண்டும் என்பது ஜனநாயக முறையில் முடிவு செய்யப்படும்” என பதிவிட்டார்.

பிரசாந்த் கிஷோரின் இந்தக் கருத்துகள் காங்கிரஸ் உடனான தேர்தல் பணிகளுக்கு முட்டுக் கட்டையாக இருக்கும் என எதிர்பார்க் கப்பட்ட நிலையில் தற்போது இருதரப்பும் முன்வந்து புதிய வாசலைத் திறந்துள்ளன.

காங்கிரஸ் கட்சிக்குள் நிலவும் முக்கியத் தலைவர்களின் அதிருப்தி, தலைமை பலவீனம், தொடர் தேர்தல் தோல்விகள் என பல்வேறு விஷயங்கள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளித்துள்ளதாக பிரசாந்த் கிஷோர் தெரிவித்துள்ளது காங்கிரஸ் - பிரசாந்த் கிஷோர் கூட்டணி என்கிற நிலையை உறுதிபடுத்துகின்றன. இந்த அறிக்கையின் மீது ஒருவார காலத்திற்குள் முடிவெடுக்க உள்ளதாக காங்கிரஸ் கட்சியும் தெரிவித்துள்ளது.

அதேபோல் எதிர்வரும் நாள்களில் பிரசாந்த் கிஷோர் காங்கிரஸ் கட்சியில் இணைய உள்ளதாகவும், அவருக்கு முக்கி யப் பொறுப்பு வழங்கப்படலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளின் மூலம் மீண்டும் தன்னை முன்னிறுத்திக் கொண்டுள்ள பாஜகவிற்கு மாற்றாக வலிமையான எதிர்க்கட்சி கூட்டணி இல்லாத நிலையில் இவ்விரு தரப்பினரின் அடுத்த கட்ட நகர்வுகள் அரசியல் அரங்கில் முக்கிய கவனம் பெற்றுள்ளன.

எதுஎப்படியாகினும் மக்களைச் சென்றடைவதும், அவர்களுடன் இணைந்திருப்பதுமே எந்தவொரு அரசியல் கட்சியும் பிழைத்திருப்பதற்கான வழி என்பதை அரசியல் கட்சிகள் உணராமல் அவற்றுக்கு விடிவுகாலம் இல்லை என்பதே உண்மை.

(பிபிசி)



# இலங்கை: அடுத்தது என்ன?

- தினேசா சமரரத்ன

**இந்தத் தருணத்தில் வாழ்ந்து வருபவர்கள் என்ற முறையில் நாங்கள் எம்மிடமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி, இந்த நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் நாங்கள் ஒரு புதிய இலங்கையைக் கட்டமைப்பதற்காக என்ன செய்ய வேண்டும் என்பதாகும்.**

இலங்கை அதன் வரலாற்றில் முன்னெப்போது மில் லாத விதத்திலான ஓர் அரசியல் அனுப வத்தை எதிர்கொண்டு வருகின்றது. போர் இடம்பெற்ற காலம், ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலம் அல்லது இனக் கலவ ரங்களின் காலத்தின் போது குறிப்பிட்ட சில இடங்களில் மக்கள் கடும் துன்பங்களையும், இழப்புக்களையும் அனுபவித்தார்கள். ஆனால், இன்று பெரும்பாலான இலங்கையர்கள் பல மாத காலமாக உண்மையான துன்பத்தை அனுபவித்து வருகின்றார்கள். இந்தச் சுமை மேலும் மேலும் அதிகரித்து, இப்பொழுது சகித்துக் கொள்ள முடியாத ஒரு கட்டத்தை எட்டியிருக்கிறது. எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக்கொள்வதற்காக வரிசைகளில் காத்து நின்ற நான்கு முதியவர்கள் மரணமடைந்திருக்கிறார்கள். இலங்கையில் இதற்கு முன்னர் ஒரு போதும் பார்த்திராத காட்சிகளை இன்று நாங்கள் பார்க்கிறோம். நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் மக்களுடைய இயல்பான அரசியல் கருத்து வெளிப்பாடுகள் இடம்பெறுவதனையும் பார்க்க முடிகிறது. வாழ்க்கையில் பல்வேறு படிநிலைகளில் இருந்து வரும் மக்கள் தாம் உடனடியாக இதனைச் செய்ய வேண்டியுள்ளது என்ற உணர்வில் இந்த ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்பதற்கு முன்வருகின்றார்கள். அரசியல் ஏற்பாட்டாளர்கள் அவர்களுக்கு ஒரு சோற்றுப் பார்சல் அல்லது வேறு ஏதேனும் பொருளை வழங்குவதன் காரணமாக அவர்கள் இதற்கு முன்வரவில்லை. பெற்றோர் புதிதாக பிறந்த குழந்தையுடனும், தனது பெண்மணி ஒரு குழந்தையை ஏந்திய வண்ணமும், வயது முதிர்தவர்கள் சுலோக அட்டைகளை தூக்கிப் பிடித்தவர்களாகவும், சிலர் நாய்களையும் கூட அழைத்து வந்து இந்த இயக்கத்தில் இணைத்திருக்கிறார்கள். இந்த அளவிலான ஒரு மக்கள் இயக்கம் இதுவரையில் இலங்கையில் எழுச்சியடைந்திருக்கவில்லை என்றே கூற வேண்டும்.






இப்பொழுது நாடெங்கிலும் இடம்பெற்று வரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கவித்துவமாக வர்ணிப்பதற்கான ஓர் உந்துதல் எனக்கு ஏற்படுகிறது. ஆனால், அவ்வாறு செய்யமாட்டேன். இந்த நிகழ்வுகள் அனைத்தும் எங்கு போய் முடியும் என்பதனை காலம் மட்டுமே சொல்ல வேண்டும். ஆனால், இந்தத் தருணத்தில் வாழ்ந்து வருபவர்கள் என்ற முறையில் நாங்கள் எம்மிடமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி, இந்த நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் நாங்கள் ஒரு புதிய இலங்கையைக் கட்டமைப்பதற்காக என்ன செய்ய வேண்டும் என்பதாகும். நான் ஒரு அரசியல் விஞ்ஞானியோ அல்லது அரசியல் கருத்துரையாளரோ அல்ல. மக்கள் எதிர்ப்பு என்ற அடிப்படையில் இலங்கை யின் இந்த அரசியல் தருணம் எதனைக் காட்டுகிறது? என்பது தொடர்பாக நான் இங்கு கருத்துக்களை முன்வைக்கப் போவதில்லை. அரசியல் யாப்பு ரீதியான ஆட்சியின் கண்ணோட்டத்திலிருந்து இதனையடுத்து எதனை நாங்கள் கற்பனை செய்து கொள்ள முடியும் என்பது குறித்து மட்டுமே நான் பேசுவேன். ஆனால், இந்தக் கேள்விக்கு பதிலளிப்பதற்கு முன்னர் நாங்கள் இன்று இந்த நிலைக்கு வந்து சேர்ந்திருப்பது ஏன், எப்படி என்ற விடயம் குறித்து சுருக்கமாக எடுத்து விளக்குவது பயனுள்ளதாகயிருக்குமென நினைக்கிறேன்.

பல அரசாங்கங்களினால் துன்பங்களை அனுபவித்து வந்திருக்கும் இலங்கையர்கள், கல்விமான்கள், செயற்பாட்டாளர்கள் ஆகிய தரப்புக்கள் இலங்கை ஜனநாயகம் குறித்தும், அதன் தனித்தனிக் கூறுகள் குறித்தும் பல விடயங்களை கூறியிருக்கின்றார்கள். நீண்டகாலமாக தமிழர்களும், முஸ்லிம்களும் பல சந்தர்ப்பங்களில் அடிப்படை உரிமை மீறல்களை அனுபவித்து வந்திருக்கிறார்கள். இனத்துவச் சிறுபான்மையினர் மற்றவர்களை பார்க்கிலும் அதிக அளவில் தன்னிச் சையான கைது மற்றும் தடுத்து வைப்பு என்பவற்றுக்கு ஆளாகியிருக்கின்றனர். பல அரசாங்க அதிகாரிகளினால் உதாசீனத்திற்கும், பாரபட்சத்திற்கும் உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். சிறுபான்மை சமூகங்களை எது வேண்டுமானாலும் செய்ய முடியும் என்ற எண்ணத்தில் பல சந்தர்ப்பங்களில் மக்கள் பிரதிநிதிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். வண. கல்கந்தே தம்மானந்த தேரர், Youtube இல் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கும் அவருடைய பகிரங்க செய்திகளில் இந்த பிரச்சினைகள் சிலவற்றை குறிப்பிட்டிருக்கிறார். விளிம்பு நிலையில் இருந்து வரும் (போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களை அவர் அவ்வாறு குறிப்பிடுகின்றார்) மக்களை அரசாங்கம் நடத்தியிருக்கும் விதம், அந்தந்த அரசாங் கத்தின் நாணயம் மற்றும் நீதியுடன் ஆட்சி நடத்துவதற்கான கடப்பாடு என்பவற்றுக்கான அளவுகோலாக இருந்து வருகின்றது என அவர் கூறுகிறார். இவ்விதம் இந்த மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வரும் விடயம் குறித்து பெண் செயற்பாட்டாளர்களும், கல்விமான்களும் ஒன்றன்பின் ஒன்றாக வந்த அரசாங்கங்களிடம் குரல் எழுப்பி வந்துள்ளார்கள். கொள்கை வகுப்பவர்கள் குறிப்பிட்ட சமூகத்தினரை பொதுப் புத்திசார்ந்த அணுகுமுறையின் அடிப்படையில் நடத்துவதனை அவர்கள் எதிர்த்து வந்துள்ளார்கள். நாட்டுக்கு அன்னியச் செலாவணியை ஈட்டித் தருவதிலும், சம்பளம் இல்லாத குடும்பப் பாரம ரிப்புத் துறையில் ஒரு முன்னணி பங்கினை வகித்து வருவதிலும், இலங்கைப் பெண்கள் மோசமான ஆட்சி மற்றும் சுரண்டல் என்பவற்றின் சுமையை தாங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்ற விடயத்தை அவர்கள் ஆட்சியாளர்களுக்கு நினைவூட்டுவதற்கு முயன்றுள்ளார்கள். பெண்கள் தொடர்பான எத்தகைய அரசியல் பிரதிநிதித்துவமோ அல்லது உள்வாங்கலோ இல்லாத நிலையில் இந்த முயற்சிகள் அனைத்தும் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. பொது மக்களின் நலன் உதாசீனம் செய்யப்பட்டமை, ஊழல் கலாசாரம் பார்க்கு மிடமெல்லாம் ஊடுருவியிருக்கும் நிலை, இயற்கை வளங்களின் சுரண்டல் போன்ற பரவலான பிரச்சினைகளை என்னால் சொல்லிக் கொண்டே போக முடியும். மேலும், அரச நிறுவனங்கள் தமது பணிப்பாணைகளை நிறைவேற்றிவைக்கத் தவறியிருக்கும் விடயத்தினையும் என்னால் நினைவூட்ட முடியும். இலங்கை மின்சார சபை, மத்திய வங்கி மற்றும் எனது சொந்தப் பணியிடமான பல்கலைக் கழகங்கள் ஆகிய அனைத்து இடங்களிலும் இது தான் நிலைமை.

இலங்கையின் மீது இப்பொழுது எந்த அளவுக்கு உயர்வாக அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது என்றால், இன்று இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் எழுப்பி, கலந்துரையாடி, அவற்றுக்கென போராடுவதற்கான ஓர் அரசியல் மற்றும் தனிப்பட்ட வெளி எமக்குக் கிடைத்துள்ளது. மேலும், அதிகம் அதிகமான மக்கள் இப்பொழுது பிணைப்புக்களை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இனத்துவச் சிறுபான்மையினர் மற்றும் வறியவர்கள் ஆகிய அனைவரும் தமது மிகக் கடுமையான, அதிர்ச்சியூட்டக் கூடிய அனுபவங்களை ஒரு பரந்த பின்புலத்தில் பகிர்ந்து கொள் கிறார்கள். அதிகார துஷ்பிரயோகம் மீதான எதிர்த் தாக்குதல் கற்பனைக்கு எட்டாத அளவில் உச்ச மட்டத்தில் இடம்பெற்று வருகின்றது. அரசியல் சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் மக்களின் உரிமைகளை மதிக்கத் தவறும் போக்கு, வெகு விரையில் ஏனையவர்கள் மத்தியிலும் விரிவாக்கப்பட முடியும். அவசர காலச் சட்டம் பிரகடனம் செய்யப் பட்டு ஒரு வார காலத்திற்குள் இன்று (ஏப்ரல் 6) நான் காலையில் துயிலெழும் பொழுது இந்தப் பிரகடனம் ஜனாதிபதியினால் ரத்து செய்யப்பட்டுள்ளது என்ற விடயத்தை தெரிந்து கொண்டேன். இலங்கை குடியரசாக மாறிய பின்னர் அநேகமாக 2012ஆம் ஆண்டு வரையில் அது தொடர்ந்தும் அவசர காலச் சட்டத்தின் கீழேயே ஆளப்பட்டு வந்துள்ளது. அவசர காலச் சட்டத்தின் கீழான ஆட்சி நாட் டில் சர்வசாதாரணமாக இடம்பெற்று வந்துள்ளது. ஆனால், இன்று அலை மறு திசையை நோக்கித் திரும்புவதை பார்க்க முடிகின்றது. இலங்கையில் நிலவி வந்த அரசியல் கலாசாரம் மற்றும் காலனித்துவத்தின் ஏகாதி பத்திய மரபுரிமை என்பன (குறைந்தது அதன் ஒரு பாகம்)



முடிவுக்கு வருவதன் ஓர் அடையாளமாக இது இருக்கின்றதா என்ற கேள்வி எனக்கு எழுகின்றது.

ஆகவே, அடுத்து என்ன? தேவைப்படும் அடுத்த காரியம் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து விடுவதாகும் என நான் நம்புகிறேன். அது ஒரேயொரு படிமுறை மட்டுமல்லாமல், அத்தியாவசியமான படிமுறையாகவும் இருந்து வருகின்றது அந்தப் படிமுறையை முன்னெடுக்காமல் எமக்குத் தேவைப்படும் அரசியல் மாற்றத்தையும், மக்கள் கோரி வரும் அரசியல் மாற்றத்தையும் நாங்கள் சாதித்துக் கொள்ள முடியாது.

**(மிகுதி நாளை...)**

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i) நான் .................................... (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................. (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.

i) ஆற்றிலே போட்டாலும் ..........................................................................

ii) ...................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

i) பலா கன்று போல பயிர் : ..........................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................. (2 புள்ளிகள்)

09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.

i) தம்பி தண்ணீரை ............................ (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

10) தனிச்சொல்லை எழுதுக.

i) வீண் செலவு செய்பவன் : ................................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : .................................................... (2 புள்ளிகள்)

11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

i) Bread : ............................ ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.

i)  ..............................

ii)  ..............................

(2 புள்ளிகள்)

13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.

i) do / like? / What / you : ..............................................................................

ii) old / How / you? / are : .............................................................................. (2 புள்ளிகள்)

14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

i) ரோஹல : ...............................................................

ii) தொளஹ : ........................................................... (02 புள்ளிகள்)

15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

i) சோறு சாப்பிடுங்கள் : ..........................................................................

ii) அங்கே பாருங்கள் : .......................................................................... (02 புள்ளிகள்)

❖ விடை எழுதுக.

16) | 7 | 8 | / | 3 | 0 | இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..........................................................

17) ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

..............................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 06. | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| 07. | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| 08. | 1) நாற்று | 2) தாள் | |
| 09. | 1) மடமட | 2) தக தக | |
| 10. | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| 11. | 1) பாண் | 2) முகில் | |
| 12. | 1) Star | 2) Table | |
| 13. | 1) What do you like? | 2) How old are you? | |
| 14. | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| 15. | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| 16. | 8 730 | 17. 7 309 | |

கல்வி tv CHANNEL-1

## 13.04.2022 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

## 13.04.2022 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் |
|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் |
| 06.45 | PLAY GROUP |
| 07.30 | முன்பள்ளி |
| 08.15 | தரம்-01 |
| 09.00 | தரம்-02 |
| 09.45 | தரம்-03 |
| 10.30 | தரம்-03 |
| 11.15 | தரம்-04 |
| 12.30 | தரம்-04 |
| 01.15 | தரம்-05 |
| 02.00 | தரம்-05 |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP |
| 04.15 | முன்பள்ளி |
| 05.00 | தரம்-01 |
| 05.15 | தரம்-02 |
| 06.00 | தரம்-03 |
| 06.45 | தரம்-03 |
| 07.30 | தரம்-04 |
| 08.15 | தரம்-04 |
| 09.00 | தரம்-05 |
| 09.45 | தரம்-05 |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 |
| 12.30 | தரம்-03 |
| 01.15 | தரம்-04 |
| 02.00 | தரம்-04 |
| 02.45 | தரம்-05 |
| 03.30 | தரம்-05 |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English |
| 05.30 | English |

# சிறுமி துஷ்பிரயோகம் இளைஞரொருவர் கைது

திருமலை, ஏப். 19

திருகோணமலை - கந்தமலாவ பகுதியில் 15 வயதுடைய சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் இளைஞரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரைத் திருகோணமலை நீதி மன்றில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுமி வைத்திய பரிசோதனைக் காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இச்சம்பவம் தொடர்பாக கோமரங்கடவல பொலிஸார் விசா ரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# தனியார் பஸ்ஸும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்து!

## நான்கு பேர் படுகாயம்



மட்டக்களப்பு, ஏப். 19

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதி, ஆரையம்பதி பாலமுனை சந்தியில் தனியார் பஸ் வண்டியும், ஓட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக காத்தான் குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# குளிக்கச் சென்ற இளைஞன் முதலை தாக்கியதில் மரணம்

மட்டக்களப்பு, ஏப். 19

முதலை தாக்கியதில் நபரொருவர் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோரகல்லிமடு பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய பூபாலப்பிள்ளை துரைராசா எனும் நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விவசாய நடவடிக்கையை முடித்து விட்டு கானந்தனை பகுதி ஆற்றில் குளித்துக்கொண்டிருந்தபோதே இவர் முதலை தாக்கி உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்த நபரின் உடல் வாழைச் சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச் சேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஒழுக்காற்று நடவடிக்கை என்பது முஸ்லிம் கட்சிகளின் வேடிக்கை!

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. சாடல்

மட்டக்களப்பு, ஏப்.19

**ஒழுக்காற்று நடவடிக்கை முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாற்றப் பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.**

**கிண்ணியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒழுக்காற்று நடவடிக்கை என்பது முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாற்றப்பட்டுள்ளது. 20ஆம் திருத்தச் சட்டத்தின் பின் ஒழுக் காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்கள்.

ஆனால் வழங்கப்பட்டதோ தேசிய அமைப் பாளர் போன்ற பதவிகள். மீண்டும் நிதிச் சட்ட மூலம், வரவு-செலவுத் திட்டம் போன்றவற்றில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தார்கள்.

மீண்டும் ஒழுக்காற்று நடவடிக்கை என்றார் கள். நான்கு மாதங்களாக ஒன்றுமில்லை. ஆனால் இன்று அவர்கள் பஸிலி ராஜபக்ஷவுடன் அமைச் சுகளுக்காகப் பேரம் பேசிக் கொண்டிருக்கின் றனர்.

நேற்று (நேற்று முன் தினம் ) முஸ்லிம் காங்கி ரஸ் தலைவர் ஹக்கீம் பிரதிச் சபாநாயகர் வாக் களிப்பில் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து வாக்க ளிக்காவிட்டால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார்.

வரவு-செலவுத் திட்டத்தின் பின்னர் கூறிய ஒழுக்காற்று நடவடிக்கையையே இன்னும் காணவில்லை.

இதில் தற்போது புதிதாக ஒன்று அமைச்சுப் பதவிகளுக்குப் பேரம் பேசிக்கொண்டிருப்



பவர்கள் எவ்வாறு எதிர்க்கட்சிகளுடன் இணைந்து வாக்களிப்பார்கள்.

இது ஒன்றும் ஹக்கீமுக்கு தெரியாமலில்லை. மக்களை ஒழுக்காற்று நடவடிக்கை என்னும் பெயரில் அவரும் ஏமாற்றி வருகிறார் என்பதே உண்மை.

ராஜபக்ஷக்கள் எவ்வாறு சிங்கள மக்களை ஏமாற்றி வந்தனரோ அதுபோன்றே முஸ்லிம் களை இந்த முஸ்லிம் கட்சித் தலைவர்கள் ஏமாற்றி வருகின்றனர்-என்றார். (அ)

# தந்தை கொலை மகன் கைதானார்

## திருகோணமலையில் சம்பவம்

திருமலை, ஏப். 19

திருகோணமலை - பாலத்தடிச்சேனை பகுதியில் மகனின் தாக்குதலினால் தந்தையொருவர் உயிரிழந் ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற் றுள்ளது.

மதுபோதையில் வந்த மகன் உறங்கிக்கொண்டிருந்த தந்தையைத் தாக்கியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

மூதூர்- பாலத்தடிசேனை பகுதியைச் சேர்ந்த முருகப்பிள்ளை கைலாசப்பிள்ளை ( வயது-59) என்ப வரே இவ்வாறு உயிரிழந்தார்.

ஏற்கனவே குடும்பத் தகராறில் மகன் தந்தையைத் தாக்க முற்பட்டார் என்றும் நேற்று முன் தினம் இரவு மதுபோதையில் வந்து அவர் உறங்கிக்கொண்டிருந்த தந்தையைத் தாக்கினார் எனவும் ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் கே.விநோதன் (வயது-29) என் பவரைக் கைது செய்துள்ளதாகவும் உயிரிழந்தவரின் சட லம் பிரேதப் பரிசோதனைக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல மூதூர் நீதி மன்றம் அனுமதி வழங்கியதாகவும் பொலிஸார் கூறினர். (அ)

# கிழக்கு மாகாண பாடசாலைகள் நேற்று ஆரம்பம்!

திருகோணமலை, ஏப். 19

கிழக்கு மாகாணத்தின் சகல பாடசாலை களும் முதலாம் தவணைக்காக நேற்று திங் கட்கிழமை ஆரம்பமாகின.

நாடு முழுவதுமுள்ள பாடசாலைகள் கடந்த 4ஆம் திகதி மூன்றாம் தவணை விடு முறைக்காக மூடப்பட்டன. இந்நிலையில் நேற்று சகல பாட சாலைகளும் புதிய கல்வியாண்டுக்காக ஆரம்பமாகின. கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக் களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் பாடசாலைகள் ஆரம்பமாகின. மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலைகளுக்கு சமுகமளித்தமையை காணமுடிந்தது.

முதலாம் தவணை எதிர்வரும் மே 20ஆம் திகதி வரை நடைபெறும். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்காக மே 21ஆம் திகதி தொடக்கம் ஜூலை 5ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப் படும். இதேசமயம் முஸ்லிம் பாட சாலைகளில் மே 4ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை முதலாம் தவணை கல்வி செயல்பாடுகள் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மடத்தடி அம்மன் ஆலயத்தில் சித்ரா பௌர்ணமி விசேட பூசை

மட்டக்களப்பு, ஏப். 19

இந்துக்களின் புனித தினமான சித்ரா பௌர்ணமி தினத்தை முன் னிட்டு கடந்த சனிக்கிழமை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தில் விசேட பூசை மற்றும் அன்னதானம் இடம் பெற்றது.

சித்ரா பௌர்ணமி தினத்தை முன்னிட்டு சித்திர குப்தர் நாயனார் சரிதம் பாடப்பட்டது.

காரைதீவை சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் சா.கந்தசாமி ஆலையடி வேம் பைச் சேர்ந்த எஸ்.கிருபைபராஜா தலை மையிலான குழுவினர் சரிதம் படித் தனர்.

12 மணிக்கு சித்ரா பௌர்ணமி விஷேட பூசை ஆலய குரு சிவசிறி ஹோவர்த்தன சர்மா தலைமையில் நடைபெற்றது.

வரலாற்றில் என்றுமில்லாத வகை யில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இவ் விசேட பூசையில் கலந்து கொண்ட னர்.

ஆலய அறங்காவலர் சபை ஆலோ சகர் வி.ரி.சகாதேவராஜா சித்ரா பௌர் ணமியின் சிறப்பு பற்றி உரையாற்றி னார்.

தொடர்ந்து அம்மன் அன்னதான மண்டபத்தில் அன்னதான வைபவம் நடைபெற்றது.

மாலையில் 4 மணியளவில் மண் டலாபிஷேக பூஜை இடம்பெற்றது.





# 3,000 உக்ரைன் படையினர் போரில் வீரமரணமாகினர்

### அந்நாட்டு ஜனாதிபதி அறிவிப்பு



*கீவ், ஏப். 19*

ரஷ்ய படையெடுப்பு ஆரம்பத்தில் இருந்து இதுவரை 3 ஆயிரம் உக்ரேனிய வீரர்கள் உயிரிழந்தனர் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

மேலும் 10 ஆயிரம் பேர் வரை காயமடைந்துள்ளனர் என்று சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் கூறியுள்ளார்.

ஒரு மாதத்திற்கு முன்னர் சுமார் 1,300 உக்ரேனிய துருப்புக்கள் இறந்தனர் என்றும், அதிகளவான ரஷ்ய வீரர்கள் கொல்லப்பட்டனர் என்றும் உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இருப்பினும் பொதுமக்களை உள்ளடக்காத இந்த புள்ளிவிவரங்களை சரிபார்க்க முடியவில்லை என பி. பி. சி. ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

# ரஷ்யா - உக்ரைன் யுத்தத்தால் 170 கோடி பேர் பாதிக்கப்படுவர்!

### ஐ. நா. சபை கவலை



**நியூயோர்க், ஏப். 19**

**உக்ரைன்மீதான ரஷ்யாவின் போர் காரணமாக உலகம் முழுவதும் சுமார் 170 கோடி பேர் வறுமையால் பாதிக்கப்படுவார்கள் என்ற ஐக்கிய நாடுகள் (ஐ. நா.) சபையின் பொதுச்செயலாளர் அன்ரனினோ குட்ரரெஸ் தெரிவித்துள்ளார்.**

இந்த போரால் உலகம் முழுவதும் உள்ள மக்களில் 5இல் ஒரு பங்குக்கும் கூடுதலானோர் வறுமையால் பாதிக்கப்பட்டு, பட்டினியை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

உக்ரைனில் மிகப்பெரிய மனிதப்பேரவலம் ஏற்பட்டுள்ளது. அத்துடன், இந்தப் போரால் உக்ரைன் மட்டும் பாதிக்கப்படவில்லை. எல்லைகளை கடந்து வளர்ந்து வரும் நாடுகளும் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் ரஷ்யாவின் போர் உலக நாடுகள் மீதான மௌன யுத்தமாகவும் அமைந்துள்ளது. இது விவசாயத்திலும் கடும் பாதிப்பை ஏற்படுத்தி, உற்பத்தியில் எதிர்மறையான தாக்கத்தை செலுத்தும். இதனால் உலகில் வறுமை நிலை தவிர்க்க முடியாது போகும்", என்றும் அவர் கூறினார்.

# உளவு பணிக்காக செயற்கைகோள் வெற்றிகரமாக ஏவியது அமெரிக்கா



*வாஷிங்டன், ஏப். 19*

அமெரிக்க இராணுவத்துக்கு சொந்தமான உளவு செயற்கைக்கோள் ஒன்றை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் பால்கன் 9 ஏவூர்தி (றொக்கெட்) மூலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

உலகின் பெரும் பணக்காரரான எலான் மஸ்கின் விண்வெளி நிறுவனமான "ஸ்பேஸ் எக்ஸ்" தங்களின் சொந்த ஆராய்ச்சிக்காகவும், வணிக ரீதியிலும் செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்துகிறது.

அந்த வகையில் நேற்றுமுன்தினம் உளவு செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள வாண்டன்பெர்க் விண்வெளித் தளத்தில் இருந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.13 மணிக்கு பால்கன் 9 றொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது. செயற்கைக் கோளை வெற்றிகரமாக நிலைநிறுத்தியதாக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

- சீனாவில் உயரும் கொரோனா மரணம் -

# முடக்கத்தின் பின்னர் ஷங்காயில் மூவர் பலி!

*பீஜிங், ஏப். 12*

கடந்த மார்ச் மாதம் சீனாவின் ஷங்காய் நகரம் தொற்று பரவலால் முடக்கப்பட்டது. இதன் பின்னர் தொற்றால் மூவர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், பாதிக்கப்பட்டவர்கள் 89 - 91 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் தடுப்பூசி இவர்கள் தடுப்பூசி பெறாதவர்கள் என்று சீனாவின் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஷங்காய் நகரில் திங்களன்று 22 ஆயிரத்து 248 புதிய கோவிட் தொற்றுகளை பதிவு செய்துள்ளது. உலகளாவிய தொற்றுகளுடன் ஒப்பிடும்போது ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தாலும் புள்ளிவிவரங்கள் சமீபத்திய வாரங்களில் அதிகரித்து செல்கின்றன.

நகரத்தில் பல்லாயிரக்கணக்கான கோவிட் தொற்றுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை அறிகுறியற்றவை என்று கூறப்படுகின்றது.

# உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் ஆறு பேர் மரணம் 11 பேர் காயம்!



*கீவ், ஏப். 19*

லிவிவ் நகரம்மீது திடீரென 4 ஏவுகணைகளை ஏவி ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது.

ரஷ்யா - உக்ரைன் நாடுகளுக்கு இடையேயான போர் 54ஆவது நாளாக நடைபெற்று வருகிறது. இந்த போரில் ரஷ்யா உக்ரைனின் முக்கிய நகரங்களை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தி வருகிறது.

உக்ரைன் சில இடங்களில் கைப்பற்றப்பட்ட இடங்களை மீட்டுள்ளது. இந்நிலையில் நேற்று அதிகாலை மேற்கு உக்ரைன் நகரமான லிவிவ் மீது தொடர் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர் என்றும் ஒரு குழந்தை உட்பட 11 பேர் படுகாயம் அடைந்தனர் எனவும் அந் நகரின் மேயர் ஆண்ட்ரி சாடோவி தெரிவித்துள்ளார்.

# ஜெருசலேம் மசூதியில் மோதல் 20 பலஸ்தீனர்கள் படுகாயம்!



*ஜெருசலேம் ஏப்.19*

ஜெருசலேமில் உள்ள அல்-அக்ஸா மசூதி வளாகத்தில் இஸ்ரேல் படையினரும் பலஸ்தீனர்களும் நேற்று மீண்டும் மோதலில் ஈடுபட்டனர். இதில் 20 பலஸ்தீனர்கள் படுகாயங்களுக்கு இலக்காகினர்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை அல்-அக்ஸா மசூதி வளாகத்தில் இடம்பெற்ற மோதலில் 150 பலஸ்தீனர்கள் காயமடைந்த நிலையில் மூன்று நாட்களில் இடம்பெற்ற மோதல்களில் காயமடைந்த பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை 170இற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்குக் கரையில் உள்ள பலஸ்தீனர்களுக்கும் இடையே மார்ச் மாத இறுதியில் தொடங்கிய வன்முறைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்ரேலில் நடந்த மோசமான தாக்குதல்களாக இவை பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிலிப்பைன்ஸில் சூறாவளி தாக்கம் 172 பேர் உயிரிழப்பு 110 பேர் மாயம்!

*மணிலா, ஏப். 19*

பிலிப்பைன்ஸ் நாட்டில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தாக்கிய "மெகி" சூறாவளியால் 167 பேர் உயிரிழந்தனர். 110 பேர் காணாமல் போயுள்ளனர். ஆயிரக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தெற்கு மற்றும் மத்திய நகரங்களை மெகி சூறாவளியால் பலத்த காற்றுடன் கடும் மழையும் ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி உயிரிழந்த 172 பேரின் உடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதேநேரம், 110 பேர் காணாமல் போயுள்ளனர். அந்த நாட்டின் இடர் மீட்பு பணிமனையின் தகவலின்படி 3 இலட்சத்து 95 ஆயிரத்து 900 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் 909 பாதுகாப்பான முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மெகி சூறாவளியால் 47 இலட்சம் டொலர்களுக்கு - நம் நாட்டு மதிப்பில் சுமார் 153 கோடி இலங்கை ரூபாய்க்கு சமமான சொத்துக்கள் அழிவடைந்துள்ளன. 9,700 வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் தெரிக்கப்பட்டுள்ளது.







# மில்லரின் அதிரடியில் வீழ்ந்தது சென்னை!

மும்பை, ஏப். 19

கடைசிவரை பரபரப்பை ஏற்படுத்திய சென்னை சுப்பர் கிங்ஸூக்கு எதிரான போட்டியில் 3 விக்கெட்களால் வென்றது குஜராத் ரைட்டன்ஸ் அணி.

இந்த வெற்றியுடன் அணிகள் நிலையில் 5 வெற்றிகளுடன் 10 புள்ளிகளைப் பெற்று குஜராத் ரைட்டன்ஸ் முதலிடத்தில் தொடர்கிறது.

வழமையான அணித் தலைவர் ஹார்திக் பாண்ட்யா, உபாதை காரணமாக இந்தப் போட்டியில் விளையாடாததுடன் அவருக்கு பதிலாக ரஷீத் கான் அணித் தலைவராக செயல்பட்டார். சகலதுறைகளிலும் பிரகாசித்துவரும் பாண்ட்யா இல்லாதது குஜராத் ரைட்டன்ஸ/க்கு பெரிய பாதிப்பாக அமையும் என கருதப்பட்டது.

ஆனால், டேவிட் மில்லர், ரஷித் கான் ஆகியோரின் அதிரடி துடுப்பாட்டம் போட்டியில் குஜராத்துக்கு வெற்றியை ஈட்டிக்கொடுத்தன.

170 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய குஜராத் ரைட்டன்ஸ் 19.5 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஆரம்ப வீரர் ஷுப்மன் கில் (0), விஜய் ஷங்கர் (0) ஆகிய இருவரும் முதல் 2 ஓவர்களில் ஆட்டமிழந்தமை குஜராத் அணிக்கு பேரிடியாக அமைந்தது.

அபிநவ் மனோகரும் நீண்ட நேரம் தாக்குப்பிடிக்க முடியாமல் 12 ஓட்டங்களுடன் வெளியேறினார். (16 - 3 விக்.) சாதிப்பார் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஆரம்ப வீரர் ரிதிமான் சஹா (11), ராகுல் தெவாட்டியா (6) ஆகியோரும் ஆட்டமிழக்க (87 - 5 விக்.) குஜராத் மேலும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது.

ஆனால், டேவிட் மில்லர், ரஷித் கான் ஆகியோர் அபாராமான இணைப்பாட்டத்தை வெளிப்படுத்தினர். ஜோர்தான் வீசிய 18ஆவது ஓவரில் 25 ஓட்டங்களை இருவரும் குவித்து போட்டியை தம் பக்கம் திருப்பினர்.

டேவிட் மில்லர் 51 பந்துகளில் 8 பௌண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக 94 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். ரஷித் கான் 21 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 40 ஓட்டங்களைக் குவித்தார். இருவரும் 6ஆவது விக்கெட்டுக்காக 70 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

பந்துவீச்சில் டுவைன் பிராவோ 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் மஹீஷ் தீக்ஷன 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

முன்னதாக துடுப்பெடுத்தாடி சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆரம்ப வீரர் ரொபின் உத்தப்பா (3), மொயின் அலி (1) ஆகிய இருவரும் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சென்னை சுப்பர் கிங்ஸ் 6ஆவது ஓவரில் 32 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதனைத் தொடர்ந்து ருதுராஜ் கெய்க்வாட், ராயுடு ஆகிய இருவரும் மிகவும் திறமையாக துடுப்பெடுத்தாடி 3ஆவது விக்கெட்டுக்காக 92 ஓட்டங்களைப் பகிர்ந்து சென்னை அணிக்கு அணியை வலுப்படுத்தினர்.

ராயுடு 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, மொத்த எண்ணிக்கை 131 ஓட்டங்களாக இருந்தபோது கெய்க்வாட்டு பெவிலியன் திரும்பினார். அவர், 48 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 5 பௌண்டரிகளுடன் 73 ஓட்டங்களைக் குவித்தார்.

ஷிவம் டுபே 19 ஓட்டங்களுடன் கடைசிப் பந்தில் ரன் அவுட் ஆனார். அணித் தலைவர் ரவீந்திர ஜடேஜா 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். (ஐ)

# டில்லி கப்பிட்டல்ஸ் அணியில் இரு வீரர்களுக்கு கொரோனா

மும்பை, ஏப். 19

டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் வெளிநாட்டு வீரர் ஒருவர் உட்பட இரு வீரர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நடப்பு ஐ. பி. எல். தொடர் கோலாகலமாக நடக்கிறது. கொரோனா தொற்று காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட ரசிகர்களுடனேயே போட்டி நடக்கிறது. வீரர்கள் உயிர் குமுழிக்குள் இருந்து வெளியே செல்ல முடியாதவாறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், டில்லி அணியைச் சேர்ந்த வெளிநாட்டு வீரர் ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அன்ரிஜென் பரிசோதனையிலேயே இது வெளிப்பட்டது. இதைத் தொடர்ந்து மற்றொரு வீரருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.



இதையடுத்து, சகல வீரர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு பி. சி. ஆர். பரிசோதனை நடத்தப்படவுள்ளதால் மும்பையில் தங்கியிருக்கும் டில்லி அணி புனே செல்வதற்கு தாமதமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், டில்லி அணி தனது அடுத்த போட்டியில் விளையாடுவதில் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது. இந்நிலையில், வீரர் ஒருவருக்கு தொற்று ஏற்பட்டிருப்பது ஐ. பி. எல். வீரர்களிடையே அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# பஞ்சாப் அணியை பந்தாடியது சன்ரைசர்ஸ் ஹைதராபாத்!

மும்பை, ஏப்.19

பஞ்சாப் கிங்ஸ் அணி 7 விக்கெட்களால் இலகுவாக வெற்றி கொண்டது சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி. இந்த வெற்றியுடன் தனது 6 போட்டிகளில் 4ஆவது வெற்றியை ஈட்டிய ஹைதராபாத் 8 புள்ளிகளுடன் அணிகள் நிலையில் 4ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

உம்ரன் மலிக், புவ்னேஷ்வர் குமார் ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சுகளும், அபிஷேக் சர்மா, ராகுல் த்ரிபாதி, அய்டன் மார்க்ரம், நிக்கலஸ் பூரன் ஆகியோரின் பொறுப்பான துடுப்பாட்டங்களும் ஹைதராபாத்தின் வெற்றியை இலகுவாக்கின.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட பஞ்சாப் கிங்ஸ், 20 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 151 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. புவனேஷ்வர் குமார், உம்ரன் மலிக் ஆகியோரின் பந்துவீச்சுகளை எதிர்கொள்வதில் பஞ்சாப் கிங்ஸ் அணி பெரும் சிரமத்தை எதிர்கொண்டது. அந்த அணியின் துடுப்பாட்ட வீரர்களில் இருவர் மாத்திரமே 25 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர். வேறு எவரும் 15 ஓட்டங்களைக் கூட எட்டவில்லை.

ஒரு புறத்தில் விக்கெட்கள் சரிந்துகொண்டிருக்க, லியொம் லிவிங்ஸ்டன் மாத்திரம் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 33 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 60 ஓட்டங்களைக் குவித்து அணிக்கு உற்சாகத்தை ஊட்டினார். அவருக்கு அடுத்ததாக ஷாருக் கான் இரண்டாவது அதிகப் பட்சமாக 26 ஓட்டங்களைப் பெற்றார்.

லிவிங்ஸ்டன், ஷாருக் கான் ஆகிய இருவரும் 5ஆவது விக்கெட்டில் பகிர்ந்த 61 ஓட்டங்களே அணியை ஓரளவு பலமான நிலைக்கு இட்டுச்சென்றது.

ஷிகர் தவான் (8), ப்ரப்சிம்ரன் சிங் (14), ஜொனி பெயர்ஸ்ரோ (12), ஜிதேஷ் சர்மா (11) ஒரியன் ஸ்மித் (13) ஆகியோர் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறினர்.

கடைசி நான்கு வீரர்கள் ஓட்டம் பெறாததுடன் உம்ரன் மலிக்கின் கடைசி ஓவரில் ஒரு ரன் அவுட் உட்பட 4 விக்கெட்கள் வீழ்த்தப்பட்டன. பந்துவீச்சில் உம்ரன் மாலிக் ஒரு ஓட்டமற்ற ஓவர் அடங்கலாக 4 ஓவர்களில் 28 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களைக் கைப்பற்றினார். புவ்னேஷ்வர் குமார் 4 ஓவர்கள் வீசி 22 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

152 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் 18.5 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்று இலகுவாக வெற்றியீட்டியது.

இந்தப் போட்டியிலும் துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் கேன் வில்லியம்சன் பிரகாசிக்கத் தவறி 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆனால், மற்றைய 4 துடுப்பாட்ட வீரர்கள் 30 ஓட்டங்களுக்கு மேல் பெற்று அணியின் வெற்றியை இலகுவாக்கினர்.

அபிஷேக் சர்மா (31), ராகுல் திரிபாதி (34) ஆகிய இருவரும் 2ஆவது விக்கெட்டுக்காக 48 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். அவர்கள் இருவரும் 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து அபாரமாகத் துடுப்பெடுத்தாடிய அய்டன் மார்க்ரம், நிக்கலஸ் பூரன் ஆகிய இருவரும் பிரிக்கப்படாத 4ஆவது விக்கெட்டுக்காக 75 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை வெற்றிபெறச் செய்தனர்.

மார்க்ரம் 27 பந்துகளில் 41 ஓட்டங்களுடனும் நிக்கலஸ் பூரன் 35 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பஞ்சாப்பின் பந்துவீச்சில் ராகுல் சஹார் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.



# அள்ளிக்கொடுத்த வள்ளலானார் சென்னையின் கிறிஸ் ஜோர்தான்

மும்பை, ஏப். 19

நடப்பு ஐ. பி. எல். தொடரில் ஒரு போட்டியில் அதிக ஓட்டங்களை கொடுத்த பந்து வீச்சாளராக சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் கிறிஸ் ஜோர்தான் மாறியுள்ளார்.

குஜராத் ரைட்டன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் ஜோர்தான் 3.5 ஓவர்கள் வீசி, 58 ஓட்டங்களைக் கொடுத்தார். இதில் அவர் வீசிய மூன்றாவது ஓவரில் மட்டும் 25 ஓட்டங்களைக் கொடுத்திருந்தார். அந்த ஓர் ஓவர் ஆட்டத்தின் முடிவையே மாற்றி அமைத்தது என்றும் சொல்லலாம்.

இந்தப் போட்டியில் சென்னை அணி 169 ஓட்டங்களை சேர்ந்திருந்தது. அதோடு நடப்பு தொடரில் ஆறு போட்டிகளில் விளையாடி ஒரே ஒரு போட்டியில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமைச்சரவை மாற்றத்தினால் பிரச்னைகள் தீரப்போவதில்லை

## சுட்டிக்காட்டுகிறார் திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு, ஏப். 19

புதிய அமைச்சரவையை நியமித்துள்ளதால் மாத்திரம் மக்களின் பிரச்னைகள் தீர்ந்துவிடும் என எண்ணுவது நகைப்புக்குரிய விடயம் ன ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு தற்போது மிகவும் பயங்கரமான நிலைமையை நோக்கி சென்றுக்கொண்டிருக்கின்றது. ஒரு வாரத்துக்கு முன்னர் ஆரம்பமான மக்களின் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

வாரங்களாக நாடு அராஜக நிலைமையை நோக்கி செல்லும்போது, ஜனாதிபதியும் அரசாங்கத்தினரும் ஏன் அமைதியாக இருக்கின்றனர் என்பது எமக்கு பெரிய கேள்வியாக இருக்கின்றது.



ஸ்திரத்தன்மை ஏற்படுத்தி அரசாங்கமாக மீண்டும் செயற்படும் நோக்கில் புதிய அமைச்சரவை நியமித்துள்ளதாக ஊடக செய்திகளில் கூறப்பட்டுள்ளன.

ஒரு வாரமாக மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்துவதும் காலிமுகத் திடலில் கூடி இருந்து கோட்டா கோ ஹோம் என ஏன் கூறுகின்றனர். ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் மக்கள் முற்றாக நிராகரித்துள்ளனர்.

மக்கள் ஏன் நிராகரிக்கின்றனர். நாட்டின் அடிப்படை பிரச்னைகளை தீர்க்கவும் மக்களுக்காக செயற்படவும் அவர் தவறியுள்ளனர் என்பதே இதற்கு காரணம்.

ஜனாதிபதியும் அரசாங்கத்தினரும் தோல்வியடைந்துவிட்டனர் என்று மக்கள் முடிவு செய்துள்ளனர். மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற அரசாங்கம் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

இது மக்களின் அரசாங்கம் என்றால் எடுக்க வேண்டிய பல நடவடிக்கைகள் இருக்கின்றன. முதலாது மக்களுக்கு தடையின்றி விநியோகங்களை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதனால், தலைவலிக்கு தலையணையை மாற்றுவது போல் அமைச்சரவையை மாற்றுவதால், இந்த பிரச்னை தீரானது.

மக்கள் புதிய அமைச்சரவையை நியமிக்குமாறு கோரவில்லை. ஜனாதிபதி உட்பட முழு அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்றே மக்கள் கோருகின்றனர்-என்றார். (அ)

# சீனி வரி குறைப்பால் அரசு இழந்த ரூ. 15.5 பில்லியனை மீள அறவிடுக!

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மற்றும் தேசிய கணக்காய்வு ஆணைக்குழு பரிந்துரை

கொழும்பு, ஏப். 19

இறக்குமதி செய்யப்பட்ட சீனிக்கான வரி குறைக்கப்பட்டதன் காரணமாக அரசு இழந்த வரி வருமானத்தை, வரி குறைப்பின் மூலம் இலாபத்தை பெற்றுக்கொண்வர்களிடம் மீண்டும் அறவிட வேண்டும் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மற்றும் தேசிய கணக்காய்வு ஆணைக்குழு ஆகியன அரசாங்கத்திற்கு பரிந்துரைத்துள்ளன.

ஒரு கிலோ கிராம் சீனிக்கு விதிக்கப்பட்டிருந்த 50 ரூபாய் விசேட வணிக வரி 25 சதமாக குறைக்கப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நிவாரணம் நுகர்வோருக்கு கிடைக்காமல் போனமை தொடர்பான தேசிய கணக்காய்வு ஆணைக்குழு நடத்திய கணக்காய்வுக்கு அமைய அந்த பரிந்துரையை வழங்குவதாக அதன் தலைவர் ஓய்வுபெற்ற நீதிபதி ரோஹினி மாரசிங்க வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

ஒரு கிலோ கிராம் சீனிக்கு விதிக்கப்பட்டிருந்த 50 ரூபாய் விசேட வணிக வரியை அரசாங்கம் கடந்த 2020 ஆம் ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி 25 சதமாக குறைத்தது.

இந்த விசேட வணிக வரி 25 சதமாக குறைக்கப்பட்டதன் காரணமாக 2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி முதல் சீனிக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டதன் பின்னர், 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி 8 ஆம் திகதி வரையான நான்கு மாத காலத்திற்குள் மாத்திரம் அரசுக்கு 16 ஆயிரத்து 763 மில்லியன் ரூபாய் வரி இழப்பு ஏற்பட்டதாக கணக்காய்வில் கண்டறியப்பட்டது.

இந்த குறுகிய காலப் பகுதியில் இலங்கை சதோச நிறுவனம் அவ்வப்போது தனியார் இறக்குமதியாளர்களிடம் இருந்து அதிக விலைக்கு சீனியை கொள்வனவு செய்து குறைந்த விலைக்கு விற்பனை செய்ததன் மூலம் அந்த நிறுவனம் சுமார் 102 மில்லியன் நஷ்டத்தை சந்தித்துள்ளது.

மேலும் 2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையான சில மாதங்களில் மாத்திரம் பிரமீட் வில்மா என்ற நிறுவனத்தின் சீனி இறக்குமதியானது அசாதாரணமக 1222 வீதமாக அதிகரித்தது.

நுகர்வோருக்கு நிவாரணத்தை வழங்கும் எதிர்பார்ப்பில் அரசாங்கம் சீனி இறக்கு மதிவரியை குறைத்த போதிலும் அந்த நோக்கம் நிறைவேறாது, இறக்குமதியாளர் மற்றும் சில வர்த்தகர்கள் மாத் திரம் பொருளாதார நன்மையை பெற்றுக் கொண்டுள்ளதாக தேசிய கண் காய்வு ஆணைக்குழு கண்டறிந்தது. (அ)

# பஸ் கட்டணம் அதிகரிக்கும்?

கொழும்பு, ஏப். 19

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலை காரணமாக குறைந்தபட்ச பஸ் கட்டணம் 40 ரூபாவாக அதிகரிக்கப்படும் அபாயம் உள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சர்களை மாற்றுவதன் மூலம் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு காண முடியாது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் மேலும் கூறினார்.

அமைச்சரவையின் ராஜினாமா மற்றும் 41 ஆளும் தரப்பு எம்.பி.க்கள் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இருக்க முடிவு செய்ததைத் தொடர்ந்து நேற்று புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அ)

# நாளை புதன்கிழமை தேசிய போராட்ட நாள்

கொழும்பு, ஏப். 19

எதிர்வரும் 20ஆம் திகதியை தேசிய போராட்ட நாளாக அறிவித்து அனைத்து பணியிடங்களிலும் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட அனைத்து தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தின் தன்னிச்சையான முடிவுகளினால் நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதாகவும், இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் சம்மேளனத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

மக்கள் போராட்டத்தின் வெற்றிக்கு நிபந்தனையற்ற பங்களிப்பைச் செய்யத் தீர்மானித்துள்ளதாக தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன இயக்கங்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (அ)

# மரண அறிவித்தல்



தோற்றம்
21 - 05 - 1924

மறைவு
12 - 04 - 2022

## வைத்திலிங்கம் செல்லத்துரை

(முன்னாள் கைகேற்கில் முருகன் கோவில் அறங்காவலர் சபை தலைவர்)

யாழ். காரைநகர் மணல்பிட்டியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டன் Clayhall, Ilford, Essex ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் செல்லத்துரை அவர்கள் 12-04-2022 செவ்வாய்க்கிழமை அன்று லண்டனில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், புவனேஸ்வரி அவர்களின் அன்பு கணவரும், சிவாஜினி, சாந்தினி(ரூபி), ரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணபதிப்பிள்ளை, நேமிநாதன், மோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

பார்வைக்கு
Tuesday,19 Apr 2022 4:30 PM - 8:00 PM
H L Hawes & Son Ltd 106 Tanners Ln, Ilford IG6 1QE, United Kingdom

கிரியை
Thursday, 21 Apr 2022 10:30 AM
Forest Park Cemetery & Crematorium Forest Rd, Ilford, Hainault IG6 3HP, United Kingdom

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
Dr. V **நேமிநாதன் - மருமகன்**
Mobile : +447791063323

தகவல் :
**குடும்பத்தினர்.**

# நம்பிக்கையில்லா பிரேரணையை நாளை கையளிப்பதற்கு தீர்மானம்

கொழும்பு, ஏப். 19

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிராக கொண்டுவர இருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணை மற்றும் ஜனாதிபதிக்கு எதிரான குற்றப்பிரேரணை ஆகியவற்றை நாளை புதன்கிழமை சபாநாயகரிடம் கையளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டு விடுமுறைக்கு சொந்த இடங்களுக்கு சென்றிருக்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று செவ்வாய்க்கிழமை கொழும்புக்கு வந்த பின்னர் அவர்களதும் இணக்கப்பாட்டை பெற்றுக்கொண்ட பின்னர் கையளிக்க இருப்பதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் பிரேரணையை வெற்றிகொள்வதற்கு பாராளுமன்றத்தில் 113 உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்படுகின்றது.

எதிர்க்கட்சியில் இருக்கும் அரசியல் கட்சிகள் அனைத்தும் பிரேரணைக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்து கைச்சாத்திட்டுள்ளன. என்றாலும் ஐக்கிய தேசிய கட்சி சார்ப்பில் ரணில் விக்ரமசிங்கவிடம் இது தொடர்பாக பல தடவைகள் கேட்டிருந்தபோதும் இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை என குறித்த உறுப்பினர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

அத்துடன் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட தீர்மானித்திருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு மற்றும் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் நிலைப்பாடு இன்னும் அறிவிக்கப்படவில்லை.

என்றாலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பிரேரணைக்கு ஆதரவளிக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. அதேபோன்று அரசாங்கத்தில் இருக்கும் சிலர் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதாக எமக்கு தெரிவித்துள்ளனர்.

இருந்தபோதும் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மற்றும் ஜனாதிபதிக்கு எதிரான குற்றப்பிரேரணை ஆகியவற்றுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்தை பெற்றுக் கொண்ட பின்னர், அதனை சபாநாயகருக்கு சமர்ப்பிக்க முன்னர் பிரேரணையில் கைச்சாத்திட்டவர்களின் பெயர்ப் பட்டியலை ஊடகங்களுக்கு வெளியிடப்படும்-என்றார். (அ)

## தவறுகளை...

அத்துடன், நாட்டின் சட்டத்தை இயற்றும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு உரியது. அரசமைப்பில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களை ஏற்படுத்த எந்த நேரத்திலும் பாராளுமன்றத்துக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்க தயாராகவுள்ளேன்.

மேலும், விவசாயிகளுக்கு இரசாயன உரம் வழங்காதது தவறு என்றே இப்போது நினைக்கிறேன். மீண்டும் இரசாயன உரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

நேற்று புதிதாக பதவியேற்ற அமைச்சர்கள் மத்தியில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இவற்றை தெரிவித்தார்.

தவிர, எத்தகைய சவால்கள் வந்தாலும் எனது பொறுப்புகளிலிருலுந்து விலக மாட்டேன். தற்போதைய சவால்கள் மற்றும் சிரமங்களை நிர்வகிக்கும் பொறுப்பை புறக்கணிக்கவும் மாட்டேன். அத்தியாவசிய பொருட்களுக்காக வரிசையில் நின்று நேரத்தை செலவழிக்க வேண்டிய வாழ்க்கை செலவை ஈடுசெய்ய முடியாத மக்களின் வேதனை விரக்தி மற்றும் கோபம் நியாயமானது என்று ஏற்கிறேன் என்றும் அவர் சொன்னார்.

அமைச்சர் பதவி என்பது வரப்பிரசாதம் அல்ல. அது ஒரு பெரும் பொறுப்பாகும். எந்தவொரு கூடுதல் சலுகைகளையும் பயன்படுத்தாமல் நேர்மையான, திறமையான மற்றும் தூய்மையான நிர்வாகத்துக்கு அர்ப்பணிக்குமாறு ஜனாதிபதி புதிய அமைச்சர்களிடம் கேட்டுக்கொண்டார்.

தங்களின் கீழ் உள்ள நிறுவனங்கள் ஊழலற்றதும் மக்கள் சேவைக்கு அர்ப்பணிப்புடன் செயல்படும் நிறுவனங்களாகவும் மாற்றப்பட வேண்டும். பல நிறுவனங்கள் பெரும் நிதி நெருக்கடிக்கு உள்ளாகிய நிலையில், அதனை வேலை வாய்ப்பில் நிரப்பாமல், அவற்றை வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நிறுவனங்களாக மாற்றுவதே அமைச்சரின் பொறுப்பாகும்.

பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட பல்வேறு சிக்கல்களால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு வருத்தம் தெரிவித்த ஜனாதிபதி, தற்போதைய சவால்கள் மற்றும் சிரமங்களை நிர்வகிப்பதற்கான தனது பொறுப்பில் இருந்து விலகப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

மக்கள் படும் இன்னல்களை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு கும்பல் உருவாகியுள்ளது. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தலையிடும். அரசியல் காரணங்களால் பல தசாப்தங்களாக தாமதமாகி வரும் சில தீர்மானங்கள் எவ்வளவு கடினமாக இருந்தாலும் எடுக்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டின் சட்டம் இயற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உரியது. அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து பல்வேறு அரசியல் கட்சிகள் தெரிவிக்கும் கருத்துகள் பாராளுமன்றத்தில் கலந்துரையாடப்பட்டு நிறைவேற்றிக் கொள்வதற்கு வாய்ப்பு உள்ளது. அதற்காக எந்த நேரத்திலும் பாராளுமன்றத்திற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்க தயாராக இருப்பதாக ஜனாதிபதி கூறினார்.

எதிர்கால சந்ததியினரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், பொருளாதாரத்தை சீர் செய்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. அதியுயர் அரசியலமைப்புக்கு மதிப்பளித்து, தேவையான மாற்றங்களைச் செய்வதன் மூலம், நாடு தற்போதைய நெருக்கடியிலிருந்து விடுவிக்கப்படும். அதற்கு அவசியமான ஒத்துழைப்பை பொதுமக்கள் வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

## புதிய...

மேலும், மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்த்தன ஆகியோருக்கும் எவ்விதமான அமைச்சுப் பொறுப்புக்களும் வழங்கப்படவில்லை.

முன்னாள் அமைச்சர்களான கெஹலிய ரம்புக் வெல, சரத் வீரசேகர, காமினி லொக்குகே, டலஸ் அழகப்பெரும, பவித்ரா வன்னியாராச்சி மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் புதிய அமைச்சரவையில் இடம்பெறவில்லை.

நாமல் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ மற்றும் சஷீந்திர ராஜபக்ஷ போன்ற ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களும் புதிய அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் செயற்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 21 இராஜாங்க...

லொஹான் ரத்வத்த, வெளிவிவகார இராஜாங்க அமைச்சராக தாரக பாலசூரிய, வீடமைப்பு இராஜாங்க அமைச்சராக இந்திக அநுருத்த, நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சராக சனத் நிஷாந்த, மகாவலி இராஜாங்க அமைச்சராக சிறிபால கமலத் பொறுப்பேற்றனர்.

இதேபோன்று, நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சராக அநுராத ஜயரத்ன, சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சராக சிசிர ஜயகொடி, கைத்தொழில் இராஜாங்க அமைச்சராக பிரசன்ன ரணவீர, சுற்றாடல் மற்றும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சராக டீ. வி. சானக, கால்நடை வள இராஜாங்க அமைச்சராக டீ.பி. ஹேரத், கிராமிய பொருளாதார பயிர் செய்கை மற்றும் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக காதர் மஸ்தான், வர்த்தக இராஜாங்க அமைச்சராக அசோக பிரியந்த, தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சராக அரவிந்த் குமார், கலாசார இராஜாங்க அமைச்சராக கீதா குமாரசிங்க, கூட்டுறவு சேவை விற்பனை அபிவிருத்தி மற்றும் நுர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக குணபால ரத்னசேகர, சிறு ஏற்றுமதி பயிர்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக கபில நுவன் அதுகோரள, சுகாதார இராஜாங்க அமைச்சராக கயாஸான் நவநந்த, கல்வி சேவை மற்றும் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சராக சுரேன் ராகவன் ஆகியோர் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். (ஐ)

## 17 புதிய...

நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக தினேஷ் குணவர்த்தன, கல்வி, பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சராக ரமேஷ் பத்திரண, பொதுமக்கள் பாது காப்பு, சுற்றுலா துறை அமைச்சராக பிரசன்ன ரணதுங்க, போக்குவரத்து கைத்தொழில் அமைச்சராக திலும் அமுனுகம ஆகியோர் பதவியேற்றனர்.

நெடுஞ்சாலைகள் அமைச்சராக கனக ஹேரத், தொழில் அமைச்சராக விதுர விக்ரமநாயக்க, விவசாயம், நீர்ப்பாசன அமைச்சராக ஜானக வக்கும்புர, வர்த்தகம், சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சராக ஷெஹான் சேமசிங்க, நீர் வழங்கல் அமைச்சராக மொஹான் பிரியதர்ஷன டி சில்வா, வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சராக விமலவீர திஸநாயக்க, வலுசக்தி, மின்சக்தி அமைச்சராக காஞ்சன விஜயசேகர, இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சராக தேனுக விதான கமகே, வெகுசன ஊடக அமைச்சராக நாலக கொடஹேவா, சுகாதார அமைச்சராக சன்ன ஜயசுமண, சுற்றுச்சூழல் அமைச்சராக நசீர் அஹமட், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சராக பிரமித பண்டார தென்னக்கோன் ஆகியோர் பொறுப்பேற்றனர். (ஐ)

# அமைச்சு பதவி பெற்ற நசீர் அவமான சின்னம்

### ரவூப் ஹக்கீம் கடும் சாடல்

கொழும்பு, ஏப். 19

முழுநாடும் ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கு போராடிக் கொண்டிருக்கின்ற நிலையில், கட்சியின் கட்டுப்பாட்டை மீண்டுமொரு தடவை மீறிக்கொண்டு அமைச்சுப் பதவியை பெற்றுக்கொண்ட நசீர் அஹமட் தன்னை ஓர் அவமானச் சின்னமாக மாற்றிக்கொண்டுள்ளார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஏற்கனவே, கட்சியின் கட்டுப்பாட்டை மீறியமைக்காக நசீர் அஹமட் உட்பட 4 உறுப்பினர்களையும் கட்சியின் பதவிகளிலிருந்து நீக்கி, ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் நிலையில், அமைச்சு பதவியை பெற்றுக் கொண்டமையானது மிகவும் அசிங்கமானது.

கட்சியின் உச்சபீடம் எதிர்வரும் வெள்ளிகிழமை உத்தியோகபூர்வமாக ஒன்றுகூடி, நசீர் அஹமட்டுக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும் ஹக்கீம் கூறினார். (ஐ)

# எரிபொருள் தட்டுப்பாடு மீனவர்களுக்கு இல்லை!

### கடற்றொழில் அமைச்சு சொல்கிறது

கொழும்பு, ஏப். 19

மீன்பிடி நடவடிக்கைகளுக்கு போதுமான எரிபொருள் உள்ளதாக தெரிவித்த கடற்றொழில் அமைச்சு, பல நாள் கப்பல்களுக்கு தேவையான எரிபொருள் இருப்புக்களை எவ்வித தடையுமின்றி வழங்குமாறு அனைத்து மீன்பிடி துறைமுகங்களுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு மீன்பிடித் தொழிலில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என அமைச்சின் செயலாளர் இந்து ரத்நாயக்க தெரிவித்தார்.

மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீனவர்களுக்கு எரிபொருள் தொடர்பில் ஏதேனும் பிரச்னை இருப்பின் அமைச்சுக்கோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கோ அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

### சிறுமியை வன்புணர்ந்து காணொலி:

# தாயாரை மிரட்டிப் பணம் பறிக்க முயன்றோர் கைது

கல்முனை, ஏப். 19

13 வயது சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தி, அதை காணொலியாக பதிவு செய்து தாயாரிடம் 10 இலட்சம் ரூபாய் கப்பம் கேட்டு மிரட்டிய இரு வரை கல்முனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த ஜனவரி 05ஆம் திகதி சிறுமியின் தாயார் தனது 13 வயது மகளின் காணொலியை காட்டி 3 சந்தேகநபர்கள் கப்பம் கேட்டு மிரட்டுகின்றனர் என்று கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

சந்தேகநபர்களை பொலிஸார் இனங் கண்ட நிலையில் அவர்கள் தலைமறைவாகினர். இந்நிலையில், ஒருவர் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றிருந்தார். மற்றொருவர் மட்டக்களப்பு ஏறாவூரில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து மற்றொரு நபர் சாய்ந்தமருது பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களிடமும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளதுடன் வெளிநாட்டிற்கு தப்பிச் சென்ற சந்தேக நபரை கைது செய்ய நீதிமன்றம் ஊடாக நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## பெற்றோலுக்காக...

முதியவர் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் வாசலை அண்மித்தபோது திடீரென மயங்கி விழுந்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பேராசிரியர்...

பட்டத்தை 1968 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்த பின்னர், 1972 இல் பிரித்தானியா ஷெஃவீல்ட் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தை பெற்றார்.

1976ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் துறையில் விரிவுரையாளராக இணைந்து கொண்ட திருமதி மகேஸ்வரன் இந்தத் துறையைக் கட்டியெழுப்புவதில் அரும்பணியாற்றினார். 1986இல் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்று 1993 இல் சிரேஷ்ட பேராசிரியரானார்.

தமிழர் தாயகத்தின் மிகவும் சவாலான காலப்பகுதிகளில் துறைத்தலைவராகப் பலமுறை பணியாற்றி இரசாயனவியல் கல்வியின் தரத்தை உரிய முறையில் பேணினார். தற்போதைய வவுனியாப் பல்கலைக்கழகமானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக மாக இருந்த சமயத்தில் அதன் முதல்வ ராக 2003 தொடக்கம் 2006 வரை கடமையாற்றியிருந்தார்.

2010ஆம் ஆண்டு பல்கலைக்கழக சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின் லண்டனில் வசித்து வந்திருந்தார். இந்நிலையிலேயே நேற்று முன்தினம் இவர் காலமானார்.

இவரின் சேவையைப் பாராட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2010 இல் இவருக்கு தகைசார் பேராசிரியர் பதவியை வழங்கி கௌரவித்திருந்தது. பேராசிரியர் திருமதி இராஜேஸ்வரி மகேஸ்வரனும் அவரது கணவரான அமரர் பேராசிரியர் சி. மகேஸ்வரனும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இரசாயனவியல் துறையின் வளர்ச்சிக்குப் பெரும் சேவை ஆற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

ஈழநாடு
Eelanadu

## அரசமைப்பை திருத்துவதற்கு பிரதமர் மஹிந்த முன்மொழிவு

கொழும்பு, ஏப். 19

மக்களுக்கு பொறுப்புக்கூறும் அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கு பல்வேறு தரப்பினரும் முன்வைத்து கோரிக்கைகளை கவனத்திற்கொண்டு, அது தொடர்பில் பிரதமர் கவனம் செலுத்தியுள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பிரதமர் ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் மற்றும் சட்டவாக்க சபை போன்றே நீதித்துறையின் சாத்தியமான கருத்துக்களை உள்ளடக்கிய அரசமைப்பை திருத்துவதற்கான முன்மொழிவொன்றை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்பார்த்துள்ளார்.

அத்திருத்தப்பட்ட அரசமைப்பினூடாக மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியும் என்பது பிரதமரின் எதிர்ப்பார்பாகுமென குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஜோன்ஸ்டன் வைத்திருந்த பதவி இனி பிரசன்னவுக்கு

கொழும்பு, ஏப். 19

அரசாங்கத்தின் பிரதம கொறடாவாக பொது பாதுகாப்பு, சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று திங்கட்கிழமை அறிவித்தார்.

முன்னதாக அரசாங்கத்தின் பிரதம கொறடாவாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 - 05 - 1950



இறப்பு 18 - 04 - 2022

### பரமலிங்கம் சோதிலிங்கம்

யாழ். சரவணையைப் பிறப்பிடமாகவும், வரணி, கனடா Toronto ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட பரமலிங்கம் சோதிலிங்கம் நேற்று (18-04-2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பரமலிங்கம் - யோகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கரத்னம் தம்பதிகளின் அன்பு மருமகனும், கலாநிதியின் பாசமிகு கணவரும், தக்ஷாயினி, நிஷாந்தன், நிஷானி, விஷ்ணுகோபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்னலட்சுமி, பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காசிலிங்கம், சுவர்ணா ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சிவபாதம், இராஜேந்திரம் மற்றும் இராஜேஸ்வரி, இரஞ்சினிதேவி, ராதா, ரதி, தயாபரன், பாஸ்கரன் ஆகியோரின் மைத்துனரும்,காலஞ்சென்ற சாருமதி மற்றும் வேல்வேந்தன், கேசவன், பிரசன்னா, நிலானி ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,துவாஸ், மதுஸ் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**கலாநிதி - மனைவி**
**Mobile : +16475336564,**
**Phone : +16476463866**
**சனா - உறவினர்**
**Mobile : +94777493841**
**பஞ்சலிங்கம் - சகோதரன்**
**Mobile : +41765688231**

தகவல்:
**குடும்பத்தினர்**





# மன்னார் பொது வைத்தியசாலைக்கென பெறுமதிமிக்க மருத்துவ உபகரணங்கள்

மன்னார், ஏப். 19

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வினைத்திறன் மிக்க செயற்பாட்டுக்கு என லயன்ஸ் இன்டர்னேஷனல் கழகத்தின் நிதி உதவியில் சுமார் 30 மில்லியன் ரூபாய் பெறுமதியான மருத்துவ சிகிச்சை உபகரணங்கள் நேற்று திங்கட்கிழமை வைபவ ரீதியாக வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் மருத்துவ சிகிச்சையின் தரத்தை அதிகரிக்கும் வகையிலும் நோயாளிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சை வழங்குவதற்கான தேவையின் அடிப்படையில் வைத்தியசாலையின் அவசியத் தேவை கருதி விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக மன்னார் லயன்ஸ் கழகத்தின் அழைப்பின் பெயரில் லயன்ஸ் இன்ரர்நஷனல் கழகத்தினால் மேற்படி மருத்துவ சிகிச்சை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் லயன்ஸ் கழகத்தின் தலைவர் , லயன்ஸ் கழக உறுப்பினர்கள், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தர்மராஜ் வினோதன், மன்னார் மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் செந்தூர்பதிராஜா, வைத்தியர்கள் தாதிய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சை பிரிவு உள்ளடங்கலாக சுமார் 30 மில்லியன் ரூபாய் பெறுமதியான வைத்திய தேவைக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன. (அ)

# பஸில், ஆட்டிகல வெளிநாடு செல்ல தடை விதிக்க கோரிய மனு நிராகரிப்பு

கொழும்பு, ஏப். 19

முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோருக்கு வெளிநாடு செல்ல தடை விதிக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

2006ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை அமைச்சரவை அல்லது நாணயச் சபையின் அனுமதியின்றி நிதி கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டதாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின், மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ளவர்களுக்கு மாத்திரமே வெளிநாடு செல்ல தடை விதிக்க முடியும் என கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனவல மனுதாரர்கள் தரப்பின் சட்டத்தரணிகளுக்கு அறிவித்துள்ளார். (அ)

## நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிப்பதற்கு இரு நிபந்தனைகள்

### அரச அதிருப்தி எம்.பிக்கள் விதிப்பு

கொழும்பு, ஏப். 19

ஐக்கிய மக்கள் சக்தி சமர்ப்பிக்கும் நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிப்பதற்கு இரு நிபந்தனைகளை முன்வைத்துள்ளனர் அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக இயங்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள்.

இது குறித்து பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில நேற்று ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இதன்படி, நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றியடையும் என்பதை உறுதிப்படுத்த 113 உறுப்பினர்களின் ஆதரவை உறுதிப்படுத்துவதும், அரசாங்கம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அமைக்கப்படவுள்ள இடைக்கால சர்வகட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதுமே அந்த நிபந்தனைகள் என்றும் அவர் கூறினார். (ஐ)

## எதிர்க்கட்சி உரிமையை கோரும் சுயாதீனக் குழு

கொழும்பு, ஏப். 19

அண்மையில் அரசாங்கத்தில் இருந்து விலகிய 41 பாராளுமன்ற உறுப்பினர்களும் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்து கலந்துரையாடினர்.

தம்மை தனியான சுயேச்சைக் குழுவாக அங்கீகரிக்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கும் வகையில் நேற்றைய கலந்துரையாடல் இடம்பெற்றதாக பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

மேலும், இந்த குழுவை எதிர்க்கட்சியில் அமர அனுமதிக்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## ஓமந்தை பகுதியில் ரயிலுடன் மோதுண்டு இளைஞர் மரணம்!

வவுனியா, ஏப். 19

கொழும்பில் இருந்து யாழ். நோக்கி வந்த ரயிலுடன் வவுனியா, ஓமந்தை அரச வீட்டுத் திட்டத்துக்கு அண்மித்த பகுதியில் மோதுண்டு இளைஞர் ஒருவர் மரணமடைந்தார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் இவ் விபத்து இடம் பெற்றது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கடுகதி ரயில் ஓமந்தை, அரச வீட்டு திட்டத்துக்கு அண்மித்த பகுதியில் பயணித்தபோது தண்டவாளப் பகுதியில் பயணித்த இளைஞன் ஒருவரை மோதியதில் அவர் மரணமடைந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் ரயிலில் எடுத்துச் செல்லப்பட்டு ஓமந்தை ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இந்த விபத்தில் ஓமந்தை அரச வீட்டுத் திட்டம் 6 ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த 21 வயதுடைய சுந்தர மூர்த்தி சுதன் என்ற இளைஞரே மரணமானார். (அ)









இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-புலிவால்,தர்பார் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : BLACK AND WHITE

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

---

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு